Canada C$ 3.00 / US $2.50 / UK & Europe £ 2.00

அறிவு, ஆற்றல், அனுபவம், ஆக்கம்
ஆகியவற்றைக் குவியம் ஒன்றாகக் குவிக்கும்



SPRING 2005

குவியம்

முதுவேனில் 2005

Kuviyam brings to focus knowledge, skills, experience and creativity



அரசியல்
பேனாவும் துப்பாக்கிக் கலாச்சாரமும்

சிறுகதை
சூப்பி

அறிவியல்
கருந்துளை

கட்டுரை
ரொறன்ரோவில் தமிழ்ப் பத்திரிகைகள்

Article
A River for Jaffna

Book Review
War and Peace

Short Story
The Conflict

Heritage
The Baobab Tree

By Pon Kulendiren

குவியம் ஒரு புதிய பாதையில்...

அன்பான குவியம் வாசகர்களே.

காலத்தோடு நாம் புதிய பாதையில் புதிய யுக்திகளை பாவித்து வாசகர்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஒரு இலக்கியத்தரமுள்ள சஞ்சிகையாக வெளிவரவேண்டும் என்பதே எமது நோக்கம். “குவியம்” இணையத்தள சஞ்சிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு பல மாற்றங்கள் ஊடாக வளர்ச்சி பெற்று, உலகில் முதன் முதல் மும்மொழி இணையத்தள சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. “அறிவு, ஆற்றல், அனுபவம், ஆக்கம் ஆகியவற்றை குவியம் ஒன்றாக ஒரு இடத்தில் குவிக்கிறது.” உலகம் பூராவும் சுமார் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வாசகர்கள் குவியத்தை இணையத்தளம் ஊடாக வாசிக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீ லங்கா, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்ல மேற்கத்திய நாடுகளிலும் கணனியூடாக இணையத்தளத்தை பாவித்து குவியத்தை வாசிக்க முடியாதவர்கள் பலர் உண்டு. அவர்களது வேண்டுகோளுக்கிணங்க குவியம் இரு மொழி சஞ்சிகையாக, மற்றைய தென்னிந்திய சஞ்சிகைகளுக்கும் ஈழத்துச் சஞ்சிகைகளுக்கும் ஈடாக ஜுன் 2005ம் ஆண்டு முதற்கொண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவருகிறது. ஒரு சஞ்சிகை அச்சிட வேண்டிய செலவையும், அமைப்புச் செலவினையும். விநியோகச் செலவினையும் விளம்பரங்கள் மூலமும், விற்பனை மூலமும் நிவர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. முடிந்தளவில் தரமுள்ள விளம்பரங்கள் குறைந்தளவில் சஞ்சிகையில் வெளிவரும். குவியத்தில் சுவையான தரமுள்ள கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், அரசியல் ஆய்வு, ஆன்மீகமும் இயற்கையும், வணிகமும் அறிவியலும், தொழில் நுட்பம், மங்கையர் தொடர்பான விடையங்கள், அதோடு சிந்தித்து சிரிக்க வைக்கும் நகைச்சுவைப் பகுதி, விமர்சனங்கள், நேர்காணல் போன்ற பல விடையங்களை உள்ளடக்கும். சஞ்சிகையை கையில் எடுத்தால் கீழே வைக்க விருப்பமில்லாத வகையில் அதனுள் உள்ள விடையங்கள் அமையும் என்பது உறுதி. எழுதுவதில் ஆர்வம் உள்ளவர்கள் சுவையான, புதுமையான விடய தானத்தை குவியத்துக்கு செய்யலாம். திறமைக்கு எப்போதும் குவியத்தில் மதிப்புண்டு, ஆகையால் தகுந்த வெகுமதியும் அவ்வப்போது வழங்கப்படும். பெரும்பாலும் குவியத்தின் விநியோகம் வருடாந்த சந்தாப்பண முறையில் தபால் மூலம் நடைபெறும். பல கடைகளிலும் சஞ்சிகையை பெற்றுக் கொள்ளலாம். இணையத்தளத்தில் குவியத்தின் முக்கிய விடையங்களின் ஒரு பகுதியையே நீங்கள் இனி வாசிக்கக் கூடியதாயிருக்கும். குவியம் வளர உங்களின் ஆதரவு அவசியம்.

குவியம் பிரதம ஆசிரியர்

பொன் குலேந்திரன்



அட்டைப்படத்தில் தமிழன் கலாச்சாரம்.

இப்போது வெளிவரும் பல சஞ்சிகைகளின் அட்டைப்படங்களில் சினிமா நடிகைகளின் கவர்ச்சிப் படங்களை காணும் இக்காலக் கட்டத்தில், குவியத்தின் அட்டைப்படத்தில் நீங்கள் பார்ப்பது கனடாவில் வாழும் பிரபல ஓவியர் கண்ணன் (புகழேந்தி) அவர்கள் வரைந்த தமிழர் கலாச்சாரம், தமிழ் இலக்கியம், உடை, தொழில் நுட்ப ஈடுபாடு ஆகியவற்றை பிரதிபலிக்கும் படம். கண்ணன் போன்ற ஆக்கத்திறமை படைத்த கலைஞர்களை ஊக்குவிப்பது குவியத்தின் நோக்கங்களில் ஒன்று. அட்டைப்படத்தில் காட்டப்பட்ட விடையங்களை குவியம் உள்ளடக்குகிறது. ஆடவன் கையில் உள்ள ஏட்டுச் சுவடியும், மங்கையின் கைகளில் தீபமும், தமிழ் இலக்கியத்துக்கும், அறிவுச் சுடருக்கும் எடுத்துக்காட்டாகும். தம்பதிகள் அணிந்துள்ள ஆடை தமிழ் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு. அது மட்டுமல்ல பெண்ணின் கழுத்தில் உள்ள தாலி அவளுக்கு சமூகத்தில் ஒரு வேலி. அவளது நெற்றியில் உள்ள திலகமும் கூந்தலில் உள்ள பூக்களும், முகத்தில் தெரியும் சாந்தமும், நாணமும் ஒரு தமிழ் பெண்மையின் சிறப்பினை உலகுக்கு எடுத்துச் சொல்கிறது. காலத்துக்கேற்ப தொழில்நுட்பத்துடன் இணைந்து “தமிழ்” உலகமெல்லாம் பரவக் குவியம் இணையத் தளமூடாக வழிவகுக்கிறது என்பதையும் சொல்லாமல் சொல்கிறது அட்டைப்படம்.

விஸ்வாமித்ரன்

பேனாவும் துப்பாக்கிக் கலாச்சாரமும்

பிரபல ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஆசிரியர் சிவநாயகம், Hot Spring, Saturday Review போன்ற சஞ்சிகை, பத்திரிகைக்கு ஆசிரியராகயிருந்தவர். இரு வருடங்களுக்கு முன்னர் "பேனாவும் துப்பாக்கியும்" - Pen & the Gun) என்ற பெயரில் நூல் ஒன்றை வெளியிட்டார். ஆதில் இந்திய சமாதானப்படையுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், ஸ்ரீ லங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்களையும், சிங்கள பேரின அரசியல்வாதிகளுடன் ஏற்பட்ட சிக்கல்களையும் அழகாக படம் பிடித்து எழுதியிருந்தார். அவர் அந்த நூலுக்கு வைத்த பெயர் இப்போது ஸ்ரீ லங்காவிற்கு எவ்வளவுக்கு பொருத்தமானது என்பது தெரியவருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் சிறீலங்காவில் நடந்த ஊடகவியலாளர் கடத்தலும் அதைத் தொடர்ந்து இரு மணி நேரத்துக்குள் நடந்த பயங்கரப் படு கொலையும் அந்நாட்டில் பேச்சு, எழுத்துச் சுதந்திரத்திற்கு ஒரு சவுக்கடி கொடுத்துள்ளது. இது, கடத்தல்கள், பயங்கரப் படுகொலைகள் நடைபெற்ற ஈராக்கைப் போல் சிறீலங்காவும் மாறி வருகிறதா என்ற எண்ணத்தை மனதில் தோற்ற வைக்கிறது. பல ஊடகவியலாளர்களின் கொலைகள் எல்லாம் மர்மக் கொலைகளாக இந்த ஆட்சியில் நடந்து வருகிறது. நிமலராஜன், நடேசன் இப்போது தராக்கி என்ற மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் அவர்கள். அதாவது எழுத்து சுதந்திரம் சிறீலங்காவில் பறிக்கப்படுகிறது. துப்பாக்கிக்கும் எழுதுகோலுக்கும் இடையே புதுவிதமான பயங்கரவாதப் போர் உருவாகிக் கொண்டிருக்கிறது. இது அரச பயங்கரவாதத்தின் ஒரு முகம். பயங்கர வாதம் பல பரிமாணங்களில் உரு வெடுக்கிறது. மனித உரிமை மீறல், மதத் தலங்களை அழித்தல், கல்விக் கூடங்கள், நூலகங்களை அழித்தல் இப்படிப் பல கோணங்களில் பயங்கரவாதம் சிறீலங்காவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதில் புத்தி ஜீவிகளின் சிந்தனைகள், எழுத்துத் திறமைகள், கலைஞர்களின் ஆற்றல்கள் ஆகிய இவை அரசின் ஊழல்களைச் சுட்டிக் காட்டுபவையாக இருப்பின் அவை பயங்கரவாதச் செயல் மூலம் ஒடுக்கப்படுகின்றன. மனித உரிமை மீறல் என்ற பெயரில் பால்ய போராளிகள் பிரச்சனையைப் பெரிது படுத்தி தம்பட்டம் அடிக்கும் ஐ.நா. சபையின் மனித உரிமை மீறலை மேற்பார்வை செய்யும் குழு (Human Rights Watchdog) இப்போது இது போன்று தமிழ் எழுத்தாளர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்படடிருக்கும் பயமுறுத்தல்கள், வன்முறைகளைப் பற்றி என்ன சொல்லப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். கனேடிய ஆங்கிலப் பத்திரிகைகள் கூட இதைப் பற்றி பாராமுகமாக இருக்கிறது என்றால் இலங்கை அரசின் பயங்கரவாதம் வெளிநாட்டு ஊடகங்களையும் பயமுறுத்துகிறதா என எண்ணத் தோன்றுகிறது. அண்மையில் மெக்கன்சி என்ற பயங்கரவாதம் பற்றிய ஆராய்ச்சி செய்யும் ஸ்தாபனம் ஒன்று கனடா விடுதலைப் புலிகளைத் தடைசெய்யாது விட்டதினால் நாட்டுக்கு ஒரு பெரிய ஆபத்தை உருவாக்கியுள்ளது என எழுதித் தள்ளியது. அதே சமயம் இலங்கையில் அரச பயங்கரவாதம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதைப் பற்றி ஒரு சிறு கண்டனத்தைக் கூட வெளியிடவில்லை என்றால் ஏதோ ஒரு குறுகிய பார்வையில் தனது ஆராய்ச்சியை அந்த ஸ்தாபனம் நடத்துகிறதா என எண்ணத் தோன்றுகிறது.



சிவராம் தர்மரத்தினம் (தராக்கி)

பிரபல ஆங்கில தமிழ் பத்தரிகை நிருபரும் எழுத்தாளருமான மட்டக்களப்புப் பகுதியில் பிறந்து வளர்ந்த 46 வயதான தர்மரத்தினம் சிவராம் படுகொலைசெய்யப்பட்டது தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது எனபதை உலக நாடுகள் அறிய வேண்டும். நம் ஈழத்தமிழ் எழுத்தாளர்களிடையே ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாகத் தாக்கத்துடன் எழுதும் எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அவர்களில் மறைந்த தராக்கி என்ற சிவராமும் ஒருவர். Island பேப்பரைச் சேர்ந்த காமினி வீரக்கோன் தாரகி என்ற இவரது புனைப்பெயரை தவறுதலாகத் தராக்கி என எழுதியதால் அப்பெயரே சிவராமின் புனைப்பெயராக நிலைத்து நின்று பலரின் பாராட்டுதல்களை அவரது எழுத்துக்கள் பெற்றன. Tamil Net என்ற ஆங்கில இணையத்தள தினச் செய்தித் தாளை உருவாக்கி திறம்பட நடத்திவந்தார். உலகுக்கு அதன் மூலம் ஈழத்தமிழர்களின் துயர்களை பிரச்சனைகளை எடுத்துச் சொன்னார். அதோடு மட்டுமின்றி இராணுவப் போர், அரசியல் சம்பந்தப்பட்ட விடையங்களையும் சேது சமுத்திர திட்டம் போன்ற சூழல் சுற்றாடல் சம்பந்தப்பட்ட விடயங்களையும் அலசி ஆராய்ந்து சுவையாக எழுதி பலரின் பராட்டுக்களைப் பெற்றவர்.

ஒரு நாட்டின் கலாச்சார, பொருளாதார அபிவிருத்தி, மக்களின் ஒற்றுமை, மக்களின் அறிவு வளர்ச்சி, பாகுபாடற்ற ஆட்சி, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு நாட்டின் பத்திரிகைகளின் பங்கு மிக முக்கியமானதாகும். இலங்கையில் 86 சதவிகிதம் படித்தவர்கள் என்பது ஒரு கணிப்பு. சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா மந்திரியாக இருந்த காலத்தில் இலவசக்கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆகவே செய்திகளைப் பத்திரிகைகள் மூலம் வாசித்தறிபவர்கள் பலர். ஒரு நாட்டில் நடக்கும் சம்பவங்கள், அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், பிறநாட்டுச் செய்திகள், மக்களின் கருத்துக்கள் போன்றவைகளை மக்கள் அறிந்து, ஆராய்ந்து, கருத்துக்களைத் தமக்குத் தெரிந்தவர்களிடையே பகிர்ந்து பரிமாறி நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றுத்துக்கு ஏற்றவாறு செயல்பட ஊடகங்கள் பெரிதும் உதவுகின்றன. ஊடகங்கள் வாயிலாக வரும் வானொலி, தொலைக்காட்சிச் செய்திகள் கல்வி அறிவு உள்ளவர்களையும் இல்லாதவர்களையும் போயடைய உதவுகின்றன. வானொலி அல்லது தொலைக்காட்சி வாங்கப் பணமில்லாதவர்கள் பிறர்மூலம் செய்திகளை அறிகிறார்கள். அவ்வாறு கிடைக்கும் செய்திகள் பெரும்பாலும் முழு உருவத்தில் கிடைப்பதில்லை. காரணம் அச்செய்தியைக் கொடுப்பவர் தன் கொள்கைக்கு அல்லது கருத்துக்கு ஏற்றவாறு செய்தியை மாற்றம் செய்து வெளியிடுவார். இந்த முறையையே அனேகமாக இலங்கையில் உள்ள அரசு, இன, அரசியல், மத சார்பான பத்திரிகைகள் கடைப்பிடிக்கின்றன. கனடாவில் கூட தமிழ் பத்திரிகைகள் வியாபார நோக்கத்துடன் மக்கள் ஆதரவைப் பெறக்கூடிய

Mortgage Specialist

Wimal Navaratnam

- இதற்கு முன்னால் Bankruptcy கொடுத்தவர்களா?
- பாதிக்கப்பட்ட Credit உள்ளவர்களா?
- Credit இல்லாதவர்களா?
- சுயதொழில் செய்பவர்களா?
- கனடாவிற்கு புதிதாக குடியேறியவர்களா?

OUR SERVICES

- Residential
- Commercial
- Purchases
- Refinancing
- Privately Funded Mortgages
- Refinancing
- Credit Cards
- Equity Take Outs
- Line of Credit

Call Wimal
for your financial solutions

Tel : 905.890.9936
Fax : 905.890.6340
Cell : 416.356.9011
Email : wimalnava@rogers.com



Now available **0%** Down

உங்களின் நேரத்தையும் பணத்தையும் சேமிக்க
அழையுங்கள் – விமல் நவரத்தினம்

MORTGAGE APPROVED

When the Bank says NO We say YES

All IT Takes is one single phone call

120 Traders Blvd., Suite #118, Mississauga, ON. L4Z 2H7

விதத்திலும் எதை எல்லாம் மக்கள் விரும்புகிறார்களோ அதற்கு ஏற்றவாறு செய்திகளை உணர்ச்சியைத் தூண்டிவிடும் வகையில் திருத்தி அமைத்து வெளியிடுகிறார்கள். சில பத்திரிகைகள் ஒரே செய்தியை வேறு தலையங்கத்துடன் வெளியிடுகிறார்கள். செய்தியாளர்கள் இல்லாத காரணத்தால் தாயகச் செய்திப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை வெட்டி ஒட்டுகிறார்கள். மக்கள் எப்போதும் நல்லதையே கேட்கவும், வாசிக்கவும் விரும்புகிறார்கள். சிலருக்கு செய்தி முழுவதையும் வாசித்து அறிந்து அலசி ஆராயும் பொறுமையோ அல்லது நேரமோ கிடைப்பதில்லை. ஆகவே கிளுகிளுப்பையும் விறுவிறுப்பையும் தரும் தலையங்கங்கள் தரும் செய்திகளின் முதல் இரண்டொரு வரிகளை மட்டும் வாசித்துவிட்டு எல்லாம் தெரிந்ததாக போய் விடுவார்கள். நண்பர்கள் அந்தச் செய்தியைப் பற்றி விபரமாக கேட்டால் கூசாமல் இல்லாததையும் பொல்லாததையும் புனைந்து சொல்லுவர். ஒரு செய்தி பலர் மூலம் ஒருவரைச் சேரும் போது உருக்குலைந்து போகிறது. இதனால் தான் எந்த தீர்மானத்துக்கும் முதல் ஒரு விஷயத்தை காதால் கேட்டும் நம்பாமல், நேரே பார்த்தும் நம்பாமல் தீரமாக விசாரித்து அறிவதே மேல்.

ஒரு ஜனநாயக நாடு சிறப்புடன் செயல்பட பத்திரிகைச் சுதந்திரம் மிக அவசியம். எழுத்துச் சுதந்திரத்திற்குத் தடை ஏற்படின் செய்திகள் முழுமையாக மக்களைச் சென்றடையாது. சில சமயம் முக்கிய செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுவதினால் மக்கள் கிணற்றுத் தவளைகளைப் போல் நாட்டு நடப்பு தெரியாது வாழ்க்கை நடத்தும் நிலைக்கு தள்ளப் படுகின்றனர். தற்போது இலங்கையில் உள்ள பத்திரிகைகள் சாம்ராஜ்யத்தில் வளர்ந்து தமக்கென பத்திரிகை தர்மத்திற்கெதிரான கொள்கையை வளர்த்துவருகிறார்கள். கறுவாக்காட்டு முதலாளிகளால் வளர்க்கப்பட்ட பத்திரிகைச் சாம்ராஜ்யம் நாட்டின் அமைதியின்மை, பொருளாதாரத்தின் சீரழிவு, இனத் துவேஷத்தின் வளர்ச்சி, அரசியல் சாம்ராஜ்யத்தின் வளர்ச்சி, செய்திகளையும் நடந்த சம்பவங்களையும் உண்மைக்குப் புறம்பாகவும் கற்பனை கலந்த கட்டுரைகளையும் வெளியிட்டு பத்திரிகை தர்மத்திற்கெதிரான ஒரு புதுக்கலாச்சாரத்தை உருவாக்கிவருகிறார்கள்.

ஸ்ரீ லங்கா அரசியல் அமைப்புச் சட்டத்தின் சரம் 14(1) A ஒவ்வொரு பிரஜைக்கும் பேச்சுச் சுதந்திரம், எழுத்துரிமை, வெளியீட்டுரிமை, போன்றவைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. எனினும் இவ்வுரிமை, சட்டத்தின் மூலம், தேசீய பாதுகாப்பிற்காகவும், இன மத ஒற்றுமைக்காகவும், பாராளுமன்ற வசதிக்காகவும் நீதிமன்றத்தை அவமதித்தல். இழிவுப்படுத்தல், தூண்டுதல் போன்ற குற்றங்களுக்கு அரசியல் அமைப்பு 1987 சட்டம் பகுதிகள் 14, 15 ஆகியவற்றில் தடைகளுண்டு. மேற்கூறிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கிணங்க இவ்வாறு இலங்கை அரசு இயங்குகிறதா என்பது பலர் மனதில் எழும் கேள்வியாகும். இலங்கையில் வன்முறை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது. கடத்தல், பயமுறுத்தல், கொலை போன்ற செயல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பாதாள உலகப் பிரமுகர் ஒருவர் ஒரு வருடத்துக்கு முதல் கொழும்புக் கோட்டையில் பட்டப்பகலில் எதிரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டபோது ஜனாதிபதி வருத்தம் தெரிவித்தது மட்டுமன்றி கொலையாளியை கண்டுபிடிக்கப் போலீசை உடனடி நடவடிக்கை எடுக்கும் படியும் உத்தரவிட்டார். ஆனால் ஒரு புத்தி ஜீவியும் பிரபல ஊடகவியாலாளருமான சிவராம் கொலையைப் பற்றி ஒன்றுமே பேசாமல் இருக்கிறார் என்றால் குமார் பொன்னம்பலத்தின் கொலையைப் போன்று இந்த கொலைக்கும் அரசுக்கும் தொடர்பு உண்டா என்று சிந்திக்கத் தோன்றுகிறது. ஜனாதிபதியின் குணம் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப காற்று வீசும் திசையில் மாறும். விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு குழு தோன்றியிருக்கிறது என்றால் அவர்கள் செய்யும் வன்முறைகளை கண்டும் காணாதவாறு இருக்கிறார். நாட்டில் வன்முறை கட்டுக்கடங்காது போய்க்கொண்டிருக்கிறது. திரும்பவும் எரிமலை எப்போது வெடிக்கும் என்று தெரியாத நிலை.

கேள்விக்குறி

புஷ்பா கிறிஸ்ரி


மனதிலெழுந்த நல்லவர்கள்
மண்ணில் பிறந்த வல்லவர்களென்று
எண்ணியெண்ணிப் பார்த்தபோது
எடுத்து விட்டேன் ஒரு மன்மதனை
என் அருமைத் தங்கைக்கு
என் வீட்டு மணமகனாக
நல்லவன் தான் மனிதன்
வல்லவன் தான் மனித
நேயம் உள்ளவன் தானென்று
இறுமாப்புக் கொண்டபோது
எடுத்தெறிந்து பேசிவிட்டான்
பொடிப்பயலென்று என்னால்
கடிந்து பேசமுடியவில்லை
காலத்தின் கொடியயுத்தம்
ஞாலத்தில் நடத்தும் பாடம்
சீதனக் கொடுமையிது
சீண்டிடும் பெண்குலத்தை
கொண்டிட்ட மனையாளின்
கோடிப்பணம் இல்லையென்று
வீட்டை விட்டே வெளியேற்றி
எளிதில் அலைக்களித்து
போலீசு கோடு என்று
போதாதவையும் செய்து
ஒருவாறு சேர்த்துவைத்தால்
ஒருவருடம் பேச்சில்லையென்றானாம்
என்ன சொல்ல எதைச் சொல்ல
நலமில்லா நம்மினத்தில்
வழமில்லா வாழ்க்கை நிலைமை
கேள்விக் குறிகளாய்
எம் மனதில்.. எம் மத்தியியில்...

உங்களுக்குத் தெரியுமா?

15 லட்சம் மண்டையோடுகள்

கம்போடியா நாட்டில் 15 லட்சம் பேரின் மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கம்போடியா நாட்டை ஆண்ட ஹாமீர் ரொச் என்ற அரசர் காலத்தில் கம்போடியாவை சேர்ந்த 15 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டன. தற்பொழுது இந்த உடல்கள் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. இதில் எடுக்கப்பட்ட 15 லட்சம் பேரின் மண்டை ஓடுகள் அனைத்தும் தற்போது ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

கொழும்புச் செட்டி



செட்டி என்றவுடன் நம் மனக் கண்முன்னே வந்து நிற்பது பணம் படைத்தவர்கள், நகை அடைவு பிடிப்பவர்கள், பணத்தை இலகுவில் விரயம் செய்யாத சிக்கனக்காரர், கோயில்கள் பல கட்டி பரிபாலனம் செய்தவர்கள், பெரும் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் என்பதேயாம். இலங்கையில் செட்டிமார் பல இடங்களில் வியாபாரம் செய்தவர்கள். செட்டித்தெரு என்ற பெயரில் பல வீதிகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மற்றைய ஊர்களிலுமுண்டு. யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை பகுதியில் செட்டிமார் அனேகர் வாழ்ந்தார்கள். யாழ் இந்துக்கல்லூரிக்குத் தெற்கே பல ஏக்கர் நிலம் அவர்களுக்குச்சொந்தமானது. அங்கு பல கோயில்களைக் கட்டின பெருமை அவர்களைச் சேரும். ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் உள்ள ஸ்ரீ வெங்கடேச வரதராஜபெருமாள் கோயில் செட்டிமார்களால் கட்டப்பட்ட கோயிலாகும். யாழ்ப்பாணம் சிவன்கோயில் அவர்களால் கட்டப்பட்டு இன்றும் அவர்களின் நிர்வாகத்திலுள்ளது.

இலங்கையின் தென்பகுதியில் ஹெட்டியாவத்த, ஹெட்டியாமுல்ல என்ற ஊர்ப்பெயர்கள் கூட உண்டு. அது மட்டுமல்லாமல் ஹெட்டியாராச்சி, அதிஹெட்டி, ஹெட்டிகொட, ஹெட்டிகே என செட்டியினத்தை ஞாபகப் படுத்தும் பல சிங்களப் பெயர்களுமுண்டு. இவர்கள் செட்டி இனத்தைச் சேர்ந்தவர்களா என்பது ஆராச்சிக்குரியது.

கொழும்பில் செட்டிமார் கட்டிய கோயில்கள்

தென் இந்தியாவில் உள்ள செட்டியார் குலத்தைச் சேர்ந்த திருவிளங்க நாகரதர் என்ற குடும்பத்தை சார்ந்தவர்கள் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்த செட்டியார் குடும்பத்தால் 1702ம் ஆண்டு கப்பித்தாவத்தையில் சிவன்கோயில் ஸ்தாபிக்கப்பட்டது. 1817ம் ஆண்டு ஐந்தரை ஏக்கர் நிலத்தை சிவன் பூதாயர் என்பவர் இக்கோயிலுக்குத் தானமாக எழுதிவைத்தார். அந்தக் காலத்தில செட்டியார் ஒருவருக்கு குழந்தைப்பாக்கியம் இருக்கவில்லை. தனக்கு வாரிசு பிறந்தால் சிவனுக்கு ஆலயம் கட்டுவதாக நேர்ந்தார். அவர் வேண்டியபடி ஆண்குழந்தை வாரிசாகக் கிடைத்தது. நேர்ந்தபடி கைலாசநாதர் என்ற தன் மகனின் பெயரில் கைலாசநாதசிவன் கோயிலை விநாயகர் கோயிலுக்கு அருகே கட்டினார். இப்போதும் அப்பிள்ளையாரை தரிசித்து நேர்ந்தால் பிள்ளை இல்லாதவாகளுக்கு பிள்ளைப் பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. 1933ம் ஆண்டு சிவன் கோயில் பெரியளவில் கட்டப்பட்டது. காலிவீதி. பம்பலப்பிட்டியில் (கொழும்பு 4) உள்ள ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் கோயில், செட்டியார்களால் கட்டப்பட்டது

கொழும்பு செட்டிகள் இனம்

கொழும்புச்செட்டி இனத்தவர்களின் பூர்வீக குலம் தனவைஷ்ய குலமாகும். தனம் என்பது செல்வமாகும். செட்டியினத்தின் ஒரு பகுதியினா் செல்வம் கொழிக்கும் வணிகர்கள். இவர்களை 3 பகுதிகளாக பிரிக்கலாம் என **Rev Fr Boschi** குறிப்பிட்டுள்ளார்.. தராதரத்தின்படி தன, பூ, கோ என மூன்று வைஷ்ய வம்சத்தவர்கள் இவர்களில். தன வைஷ்யர்களை செட்டி என்பர். இவர்களுடைய மூதாதையர் இந்தியாவின் வட, வடமேற்கு பகுதிகளினூடாக கூர்க் **(Coorg)** , பெனாரிஸ் போன்ற பகுதிகளில் வந்து குடியேறியவர்கள். 11ம் நூற்றாண்டில் முகம்மது கஸானி என்ற இஸ்லாமிய மன்னனின் படையெடுப்பால் பாதிக்கப்பட்டு இந்தியாவின் தென்பகுதிகளான நாகபட்டினம், திருநெல்வேலி, தஞ்சாவூர், மலபார், மதுரை ஆகிய ஊர்களுக்கு புலம்பெயர்ந்தார்கள். இங்கிருந்து தான் அவர்கள் இலங்கை, மலேசியா, மலபார் போன்ற இடங்களுக்கு சென்று வணிகம் செய்தனர். கொழும்பு செட்டிகள் பெரும்பாலும் மதுரை, மலபார் நாகபட்டனம போன்ற தென் இந்திய பகுதிகளிலிருந்து வியாபாரம் நிமித்தம் போர்த்துக்கேயர் காலத்துக்கு முன் கொழும்பில் வந்து குடியேறியவர்கள்.

ஒரு காலத்தில் கொழும்பில் செட்டிநாடு கூட்டுறவு ஸ்தாபனம் பிரபல்யமான தொன்றாகும். தமிழ்நாட்டில் செட்டி இனத்தைச் சேர்ந்தவர்கள் வணிகத்துறையைவிட வேறு துறைகளிலும் பிரபல்யமாகத் திகழ்ந்தார்கள். அவர்களில் குறிப்பிடப்பட வேண்டிவர்கள் சினிமாத்துறையில் **AVM** மெய்யப்பச் செட்டியார், இலக்கியத்துறையில் கவிஞர் கண்ணதாசன், அரசியலில் ப.உ. சிதம்பரம், நடிப்புத்துறையில் மனோரமா போன்றவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செட்டிமாரின் கல்வி நாட்டத்திற்குச் சான்று பகரும்.

செட்டி என்ற சொல் செத்தி என்ற பாளிமொழிச் சொல்லிலிருந்து பிறந்ததென்பர். இதனை சிங்களத்தில் ஹெட்டி அல்லது செத்தி என்பர். சிங்களமக்களிடையே சிறுவர்களுக்கென பாடும் பாடல்களில்கூட செட்டி என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது.

வரலாற்று ஆராச்சியாளர்களின்படி செத்தி இனம் முதன் முதலாக விஜயனின் வருகைக்கு சில வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வணிகம் செய்ய வந்த இனம் என்பது ஒரு கூற்று. விஜயன் இளவரசனின் வேண்டுகோளின்படி மதுரை மன்னன் செட்டி வம்சத்து சேடிப்பெண்களை விஜயனின் அரண்மனையில் சேவை செய்ய அனுப்பியதாக வரலாறு கூறுகிறது. பேராசிரியர் எல்லாவெல செட்டியினத்தைப் பற்றி குறிப்பிடுகையில் வெள்ளரசு மரத்தைக் காவல் செய்வதற்கு சுமித்த என்ற இளவரசனும் அவனது ஏழு சகோதரர்களும் இந்தியாவிலுள்ள அவந்தியிலிருந்து இலங்கை வந்ததாகவும், அவர்களின் தாய் தேவசேத்தி, செட்டி இனத்தவர் எனவும் குறிப்பிட்டுள்ளார். அசோக சக்கரவர்த்தியின் மனைவியான சுமித்தவின் சகோதரி செட்டி வம்சத்தவள் என்பது அவரது கூற்று. முதலாம் விஜயபாகு காலத்திலிருந்தே செட்டிகளைப் பற்றிய குறிப்புகளுண்டு. கி.பி 1205 ம் ஆண்டில் குழந்தைச் செட்டி என்ற பெயருடைய மந்திரி பற்றி பொலநறுவையில் உள்ள கல்வெட்டொன்றில் எழுதப்பட்டுள்ளது. 16ம் நூற்றாண்டு கல்தேனியா கல்வெட்டிலும் செட்டிகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்டை இராஜதானியின் (1400-1521) அழகேஸ்வர குடும்பம் செட்டி இனத்சை சேர்ந்தவர்கள். முதலாம் விஜயபாகு மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த மூவருள் செட்டிநாதர் என்பவர் செட்டி வம்சத்தைச் சேர்ந்தவர். சிங்கள நூலான மஹாவம்சத்தில் மாளவ தேசத்து அரசனின் ஏழு மைந்தர்களுடன் செட்டிமாரும் பரிசுப் பொருட்களுடன் இலங்கைவந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை அரசன் அவர்களை அதிகாரிகளாக்கி, களனிய, தோப்பு (மாதம்பைக்கு அருகே உள்ள இடம்), பலகல, போத்தல. ஹெட்டிமுல்ல ஆகிய பகுதிகளில் காணிகள் இனாமாக வழங்கியதாக

குறிப்பிடப்பட்டுள்ளது.

செட்டிகள், கொல்கொண்டாவிலிருந்து வைரமும், இராஜஸ்தானிலிருந்து மரகதமும் பர்மாவிலிருந்து சிவப்புக் கற்களும் இலங்கைக்கு கொண்டு வந்து அக்காலத்தில் வியாபாரம் செய்தனர் என்பது இரண்டாம் இராஜசிங்கன் என்ற கண்டிய அரசன் காலத்திலும் ஒல்லாந்தர் ஆட்சி காலத்திலும் வரலாற்றில் பதிவாகி உள்ளது என ATS Paul என்ற பிரபல அறுவைச்சிகிச்சை செய்யும் வைத்தியர், செட்டிகள் பற்றிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.. பணம் வட்டிக்குக் கொடுக்கும் தொழிலையும் ஆரம்பத்தில் செய்த அவர்கள் பின் படித்து பட்டம் பெற்று அரச தொழில்கள் செய்யத் தொடங்கினர். கொழும்பில் வாழ்ந்த செட்டிக் குலத்தைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரே முதன் முறையாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை பாவித்தார் என்பது எவ்வளவுக்கு அவர்கள் செல்வம் படைத்தவர்கள் எனபதை எடுத்துக்காட்டுகிறது. அவரின் மகன் அவுஸ்திரேலிய குதிரைகள் பூட்டிய அமெரிக்க குதிரை வண்டியில் கொழும்பில் உள்ள ரோயல் கல்லூரிக்கு சென்று பத்து வயதில் கல்விபயின்றதாக குறிப்பிட்டுள்ளார். செட்டி குல பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயது வரும் மட்டும் வீட்டில் கல்வி பயின்றபின்னரே பாடசாலைக்கு சென்று திறமையான மாணவர் என்ற பெயர் எடுத்தார்கள்.

பெட்டா **(Pettah)** என அழைக்கப்படும் கொழும்பு கோட்டையின் புறக்கோட்டைப் பகுதி ஜம்பெட்டா **(Jampettah)** என அழைக்கப்பட்டது. ஒரு காலத்தில் அப்பகுதிக்கு உரிமையாளார்கள் செட்டிகள். இலங்கையின் காலம் சென்ற ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனாவின் மூதாதையர் செட்டி வம்சத்தவர். 17ம் நூற்றாண்டில் மலபாரைச் சேர்ந்த செட்டியினத்தவர் ஒருவர், வெல்கம என்ற சிங்களப்பகுதியில் உள்ள சிங்களப்பெண்ணை மணம் புரிந்ததாகவும் அவ்வழி தோன்றியவரே ஜயவர்தனா என்பது பலருக்குத் தெரியாததும் பரவலாகப் பேசப்படுவதுமாகும். . இலங்கையில் அரசசேவை, வைத்திய சேவை, சமூக சேவை ஆகியவற்றில் பல தொண்டுகள் செய்து பிரபல்யமானவர்கள் கொழும்பு செட்டியினத்தவர் என்பது முக்கியமாக குறிப்பிடப்படவேண்டியது.

கொழும்பு செட்டி இனத்தவர் பெயர்கள்

கொழும்புச்செட்டிகள் கடந்த நூற்றாண்டு மட்டும் தமிழ் பேசிவந்தனர். அதுவுமன்றி தமிழ் தெலுங்கு கலந்த பெயர்களைக் கொண்டிருந்தனர். ஆனால் கடந்த 60 வருட காலத்துக்குள் ஆங்கில சிங்களப் பெயர்களாக மாற்றிக்கொண்டனர். காசிச்செட்டி என்ற பெயர் கொழும்புச்செட்டிகளிடையே நிலவும் பொதுவான பெயராகும். இக்குலப் பெயர் தமிழ்நாடு ஆந்திரா, ஓரிஸ்ஸா பிரதேசங்களில் உள்ள கோமதி செட்டியினத்திடம் இருந்து வந்த பெயராகும். காலிங்கப் பட்டணத்தில் கோமதி செட்டிகள் வாழ்கிறார்கள். அவர்கள் தாங்கள் வாழும் கலாச்சாரம் மொழியுடன் பிணைந்து வாழ்கிறார்கள்.

மைக்கல் ஒண்டாச்சி என்ற பிரபல கனேடிய எழுத்தாளரின் பெயர் காசிசெட்டி பறங்கியரின் கலப்புத்திருமணத்தின் மூலம் தோன்றியதாகும்.. அவரின் பெயர் தஞ்சாவூரைச் சேர்ந்த படையாச்சி என்ற பெயரிலிருந்து வந்ததாக ஒரு சாரார் கருத்து.

கந்தப்பா, முத்துக்கிருஷ்ணா, முத்துப்பிள்ளை, ஆனந்தப்பா, பெருமாள், முருகப்பா போன்ற தமிழ் பெயர்கள் போர்துக்கேய கத்தோலிக்க பெயர்களுடன் இணைந்த நீண்ட பல கொழும்பு செட்டிமாரின் பெயர்களுண்டு. இதில் கொழும்பில் பலர் அறிந்த பெயர்கள் லோரி முத்துக்கிருஷ்ணா, மைக்கல் ஜோசப் ரொட்ரிகோ முத்துப்பிள்ளை, மேர்வின் காசி செட்டி, கலாநிதி நிக்கொலஸ் கந்தப்பா போன்றவையாம். பிள்ளை என்பது மகன் அல்லது மகள் எனக் கருத்துப்படும். இலங்கையின் நீர்கொழும்பு பகுதிகளில் வாழும் கொழும்பு செட்டிமாரின் பல பெயர்கள் "புள்ளே" என முடிவடையும். மகன் அல்லது மகளை குறிக்கும் பிள்ளை என்ற சொல் காலப்போக்கில் புள்ளேயாக மருவியுள்ளது. இதில் மிகப் பொதுவான பெயர் பெர்ணாந்தோபுள்ளே. இங்கு பெர்ணாந்தோ என்பது போர்த்துக்கேய பெயர். புள்ளேயுடன் முடிவடையும் மற்றைய பெயர்கள் சில்வாபுள்ளே, பீரீஸ்புள்ளே, பெரெராப்பிள்ளை ஆகும். வணிகரத்தினம் என்பது ரத்தின வியாபரியினையோ அல்லது வணிகத்துறையில் ரத்தினம் போன்று பிரகாசமாய் திகழ்ந்தவரையோ் குறிக்கும். காலப்போக்கில் இப்பெயர் இராஜரத்தின, குலரத்தின, ஜெயரத்தின போன்று சிங்களப் பெயர்களைப் போல் மாற்றமடைந்து வணிகரத்தின ஆயிற்று.

சைமன் காசி செட்டி இவர் புத்தளத்துக்கு அருகேயுள்ள கற்பிட்டியைச் சேர்ந்த முதலியார் கபிரியல் காசி செட்டிக்கு மகனாகப்பிறந்தவர். கஸ்பர் காசிசெட்டி இந்து மதத்திலிருந்து கத்தோலிக்க மதத்துக்கு மாறினவர். கற்பிட்டி தமிழ் பாடசாலையொன்றில் தமிழ் பயின்ற சைமன் அரசு சேவையில் 36 வருடம் கடமையாற்றியவர். எட்டு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இவரால் பிரசுரிக்கப் பட்ட புத்தகங்கள் ஆங்கிலம் தமிழ் சமஸ்கிருதம் அகராதிகள் போன்றவையாகும். அக்காலத்தில் ஒரு தமிழ் பத்திரிகையை வெளியிட்ட பெருமையும் அவரைச் சேரும். 1989ல் தேசீய வீரர்கள் தினத்தன்று இவர் ஞாபகார்த்தமாக ஒரு முத்திரை வெளியிடப்பட்டது.

ஹென்றி பிரான்சிஸ் முத்துக்கிருஷ்ணா. இப்பெயரைப் பார்த்தவுடனே இந்து மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மதமாறியவரின் பெயர் என்பதை எவராலும் யூகிக்கமுடியும். ஆசியாவில் இவரே 1849ல் முதல் தமிழ் பரிஸ்டரானவர். தனது இறுதிகாலத்தை தன் ஆங்கில மனைவியுடன் இங்கிலாந்தில் கழித்தவர்.

கலாநிதி கிறிஸ்டோபர் ஒண்டாச்சி. செட்டி இனத்தைச் சேர்ந்த இவர் இலங்கையில் பங்குச்சந்தை மூலம் மில்லியன் டொலர் பணத்துக்கு அதிபதியானார். கனடாவில் ஒரு காலத்தில் பிரசித்தம் பெற்ற பத்து வணிகர்களில் இவர் பெயரும் உள்ளடங்கும். இவர் எழுத்தாளர் , நிதித் துறை வல்லுனர் . பரோபகாரி மைக்கல் ஒண்டாச்சி. **The English patient** என்ற இவர் எழுதிய பரிசு பெற்ற நாவல் படமாக்கப்பட்டது. இலக்கியத்துறையில் பல புத்தகங்கள் எழுதியுள்ள செட்டியினத்தை சேர்ந்த இவர் கனடாவில் வாழ்கிறார்.

ஜெயராஜ் பெர்னாந்தோபுள்ளே என்ற பெயருடைய இவர் ஒரு அரசியல்வாதி. சந்திரிகா அரசில் திட்டமிடல் பகுதிக்கு மந்திரியாயிருந்தவர். இவர் மூதாதையர் நீர்கொழும்பு பகுதியில் குடியேறிய தமிழ் பேசிய செட்டியினம்.

கம்பகா புத்தளப் பகுதியில் கொழும்பு செட்டிகள்.

கல்பிட்டி, சின்னபாடு, தோப்பு போன்ற வடமேற்குப் பகுதிகளில் அக்காலத்தில் வியாபாரம் செய்யும் நோக்கமாக கொழும்பு செட்டிமார் குடியேறினர். ஆரம்பத்தில் வியாபாரிகளாக அங்கு குடியேறிய இவர்கள் பின்னர் தென்னந்தோட்டங்கள், ஓட்டுத் தொழிற்சாலை, புகையிலை தொழிற்சாலை போன்ற பல வணிகத்துறைகளில் முதலீடு செய்தனர். மாதம்பைக்கு அருகேயுள்ள தோப்பதொட்ட என்ற ஊரில் கொழும்பு செட்டிமார் கட்டிய 300 வயதுடைய சில வீடுகளை இன்றும் காணலாம். மஃஓய கரையோரத்தில் தேக்க மரத் தோட்டங்கள் இவர்களின் முயற்சியே. செட்டிமார் விலையுயர்ந்த தேக்க மர வியாபாரம் செய்ததால் "தேக்க ஹெட்டி" என்ற நாமம் பெற்றனர். அக்காலத்தில் வயம்ப பகுதியின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு செட்டியினத்தின் சேவைக்கு மதிப்பளிக்குமுகமாக கொழும்பு செட்டி இனத்தின் தலைவருக்கு

"சட்டம்பி விதான ஆராச்சிரால" என்ற தமிழ் சொற்கள் கலந்த பட்டத்தை அரசு கொடுத்தது. பேதுரு பிள்ளை, பொன்நாந்து பிள்ளை, சூசைப்பிள்ளை போன்ற போர்துக்கேய தமிழ் மொழிகள் கலந்த பெயர்களில் பல செட்டிமார் அப்பகுதியில வாழ்ந்தனர்.

கொழும்புச் செட்டிகளின் மதம்.

வணிகத்துறையில் ஈடுபட்ட செட்டி சமூகத்தினர் மொழி மதம் ஆகிய இரண்டையும் தம் வியாபார முன்னேற்றத்துக்குச் சாதகமாகப் பாவித்தனர். திருமணங்கள் கலப்பு திருமணங்களாயிருந்தன. தமிழ் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளை சரளமாகப் பேசக் கூடியவர்களாக இருந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் கத்தோலிக்க மதத்தையும், புரோத்தஸ்தான் மதத்தை தம் வசதிக்காகத் தழுவினர். இம் மதமாற்றம் பெரும்பாலும் 18ம் 19ம் நூற்றாண்டுகளில் நடந்தன. கொழும்பு துறைமுகத்திற்கு எதிராகவுள்ள அர்ச் தோமஸ் கத்தோலிக்க ஆலயம் 1815ல் கொழும்பு செட்டிகளால் கட்டப்பட்டது. 1820ல் புதுச்செட்டித்தெருவில் உள்ள **Lady of Sorrows** என்ற கத்தோலிக்க ஆலயமும் கொழும்பு செட்டிகளால் கட்டப்பட்டது. கொழும்பில் உள்ள பம்பலப்பிட்டி வஜிராராம பௌத்த கோயிலின் புத்த பிக்குவான சோம தேரோ செட்டியினத்தவர். 1898ல் செட்டியினத்தைச் சேர்ந்த பெற்றோருக்கு பிறந்த இவர் பௌத்த மதத்தை தழுவினார். ஜெர்மனிக்கு முதன் முதலில் பௌத்த தர்மத்தை எடுத்துச் சென்ற பெருமை இவரைச் சேரும்.

1656 ம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியின் போது கொழும்பின் முதல் வைத்தியர் செட்டியினத்தவர். 1656ல் ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த போது கவர்னராக இருந்தவர் **Van de Meyden** என்பவர். அவரின் மனைவி நோயால் பிடிக்கப்பட்டு இருந்தபோது பல மேற்கத்திய வைத்தியர்கள் சிகிச்சைசெய்தும் நோயைக் குணப்படுத்த முடியவில்லை. உள்ளூர் வைத்தியம் செய்தால் ஒருவேளை நோய்குணமாகலாம் என பலர் அறிவுரை கூறினர். ஆனால் தகுந்த வைத்தியர் உள்ளூர் வைத்தியம் செய்ய கிடைக்கவில்லை. யானை வியாபாரம் செய்ய தஞ்சாவூரிலிருந்து கொழும்பு வந்த வெட்டமார் கவர்னரை சந்திக்க முடியாது பல மாத காலம் கொழும்பில் தங்கியிருந்தனர். கவர்னரிடம் வேலைபார்க்கும் முதலியார் ஒருவரிடம் கவர்னரின் மனைவியினது தீராத நோய்பற்றி அறிந்தார்கள். **Michael Juro Ondaatje** என்ற உள்ளூர் வைத்தியம் செய்யும் சிறந்த வைத்தியரை தெரியும் என முதலியாருக்கு சொல்ல அவர் அந்த விபரத்தை கவர்னருக்கு சொன்னார். உடனே கவர்னர் செட்டிகளின் வியாபார வேலையை கவனித்துவிட்டு அவர்களுக்கு உதவியாக 4 அதிகாரிகளை இந்தியா சென்று அந்த வைத்தியரை கண்டுபிடித்து தன் மனைவிக்கு வைத்தியம் செய்ய அழைத்து வரும்படி அனுப்பினார். தஞ்சாவூர் சிபார்சின் பேரில் மைக்கல் இலங்கை வந்தார். நோயாளியை பரிசோதித்த வைத்தியர் "இது ஒரு புதுமையான நோய். எனது மருந்து இதை குணப்படுத்துமா என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியாது. எதற்கும் முயற்சி செய்கிறேன்" எனக் கூறி வைத்தியம் செய்தார். 25 விதமான காட்டில் வளரும் மூலிகை இலைகளையும் மரங்களின் வேர்களையும் கொண்டுவரும்படி வேண்டினார். 11 பாத்திரங்களில் இலைகளையும் வேறு பாத்திரம் ஒன்றில் வேர்களையும் தண்ணிரில் கொதிக்க வைத்தார். தண்ணீர் உள்ள 500 கொப்பரைக்குள் இலைகளின் வடிகட்டிய சாறினை ஊற்றி அதற்குள் நோயாளியை இருக்கும் படி செய்தார். அதன் வேர்களின் சாறு நோயாளியின் மேல் ஊற்றப்பட்டது. நூறு பாத்திரற்களில் உள்ள மருத்து நீரை ஊற்றியவுடன் நோயாளிக்கு நித்திரை வரத்தொடங்கியது. மிகுதி பாத்திரங்களில் உள்ள மருத்து நீரை அவர் மேல் ஊற்றியபின்னர் அவர் நித்திரையானார். இரண்டு மணித்தியாலத்துக்குப்பின் தூக்கத்தில் எழும்பிய கவர்னரின் மனைவி தனக்கு எவ்வளவோ சுகமாயிருப்பதாக கூறி மகிழ்ச்சியடைந்தார். மகிழ்ச்சியடைந்த கவர்னர், வைத்தியருக்கு வேண்டிய பரிசுகள் கொடுத்து கொழும்பில் முதல் வைத்தியராக நியமனம் செய்தார் என்பது வரலாற்றுக் கதை. இவரே கொழும்பில் வைத்திய தொழில் செய்த முதல் கொழும்பு செட்டியுமாவார். 1714ல் இவர் மரணமடைந்தார்.

கொழும்பு செட்டிகளின் உடை.

பண்டைய கால செட்டிகள் காதுகளில் தோடு, கூரிய முனையுள்ள தொப்பி, ஜிப்பா, காலணி அணிந்திருப்பர். அரச சேவையிலிருந்த பண்டைய கால வெட்டமார் தலைப்பாகை அணிவது வழக்கம். அவர்கள் பெறுமதி கூடிய உடை அணிவது வழக்கம். பெண்கள் பழமையை பெரிதும் விரும்புவர். தம் அங்கங்கள் பிறர் பார்வைக்கு தெரியாத வாறு உடையணிவர். தலையை மூடி அணியும் துணியை சரச என்பர். அனேக பெண்கள் காலணி அணிவது கிடையாது ஆனால் விரல்களுக்கு விலையுயர்ந்த நகைகள் அணிவர். தோடு, தாலி பதக்கம் சங்கிலி போன்ற தமிழ் பெண்கள் அணியும் நகைகளையே செட்டிப் பெண்களும் அணிவது வழக்கம். காலப்போக்கில் இவை மாற்றமடைந்தன.

Refrences:

History of the Colombo Chetties compiled by Reggie Candappa

இதயத்து ஓலமே!

இதயத்து ஓலமே!
இன்னும் என்ன பாக்கி இருக்கிறது?
கேட்டுத் தான் பார்க்கிறேன்
காலனிடம்...
எனக்கு வரவேண்டிய
துன்பங்கள் யாவும்
வந்து போனபின்னும்
நான் ஏன் இன்னும்
உயிர் வாழவேண்டுமென்று
கேட்டுத் தான் பார்க்கிறேன்
காலமிருக்கிறது இன்னும்
வாழ்ந்து பாரென்று
சொல்லிச் செல்லும் காலனிடம்
இன்னும் என்ன பாக்கி....
துன்பத்தை பங்கிட்டு
துயரத்தை துயிலுரித்து
இன்பத்தை இடைமறித்து
இதயத்தை கிழித்து விட்ட
காலத்தின் கோலத்தை
யார் மாற்றுவாரோ?
கேள்விகளால் வேள்வி செய்து
காலம் கடத்தும் ஓர்
ஆன்மாவின் இதயக் கோலமா?
இல்லை
இதயத்து ஓலமே!

புஷ்பா கிறிஸ்ரீ

குவியக்குழு

தீட்டு

"கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியை தீட்டு" என்று சில வருடங்களுக்கு முன் ஒரு திரைப்படத்திற்கு கவியரசர் கண்ணதாசன் பாடல் எழுதினார். இங்கு "தீட்டு" என்ற சொல் முதலில் கத்தியைக் கூர்மையாக்குவதையும் இரண்டாவதாக எதையுமே அறிவு பூர்வமாக ஆராய்வதையும் சுட்டிக்காட்டு கின்றன. காரணத்தை தீர ஆராய முன் முடிவுகளிற்கு பாய்ந்து மற்றவர்களுடன் முட்டி மோதுவதை தவிர் என்பதே இதன் பொருளெனலாம். இந்த இரண்டையும் விட பரிசுத்தமற்ற ஒன்றைத் "தீட்டு"அல்லது துடக்கு எனச் சொல்லி ஒதுக்கிவைக்கும் சம்பிரதாயம் தமிழர் சமுதாயத்தில் இடையில் புகுந்து விட்ட ஒன்றாகும். இந்தத் "தீட்டு" பற்றி எவ்வளவுக்கு அறியாமையை நம்மவர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தால் நமது புத்தியைத் தீட்டி, தீட்டைப் பற்றி அலசி ஆராய்ந்து செயல்படுவது ஆரோக்கியமானதென்று எண்ணத் தோன்றுகிறது.

சென்ற வருடம் கனடாவிற்கு விஜயம் செய்த பெரிய பிரித்தானியாவின் மஹாராணியாரின் தோளில் கை போட்டது ஒரு அவமரியாதைத் தீண்டல் - இன்றையப் பத்திரிகைகள்

கந்தன் உயர்திணை. வெளவால் அ∴றிணை. கந்தன் கோவிலிற்குள் போக முடியாது ஆனால் வெளவால் போகலாம் இது ஒரு வகைத் தீட்டு - திரு மு கார்த்திகேசனின் நளினம்

கந்தன் கிணறு வெட்டலாம் அந்த கிணற்று நீரை இறைக்க அவனுதவி தேவை ஆனால் அவன் பினனர் தண்ணீர் அள்ளவோ குடிக்கவோ முடியாது. - நடைமுறையிலுள்ள சமுதாய விதி

மஹாராணி மீதான மாட்சிமைத் தீட்டு


எலிசபெத் மஹாராணிக்கும் தீட்டுக்கும் என்ன தொடர்புண்டு என யோசிக்காதீர்கள். மஹாராணி குடிமக்களுடன் கைகுலுக்கும் போது கையில் கையுறையுடன் தான் கைகுலுக்குவது சம்பிரதாயம். அந்த உரிமை அவருக்கு மட்டுமே உண்டு. ஏனெனில் உங்கள் வீட்டில் உள்ள சாதாரண பெண் ராணியைப் போல் அல்ல அவர். மஹாராணி என்பதால் அவரை சந்திக்கும் போது சில மரபுசார் பழக்க வழக்கங்களை நாம் கடைப்பிடிப்பது அவசியம். அவராகவே கைகுலுக்கக் கைநீட்டினால் தவிர நாமாகக் கைநீட்டுவது தவறு. தினமும் பல நூற்றுக்கணக்கான மக்களுடன் கைகுலுக்கும் மஹாராணி கையுறை போடாது கைகுலுக்கினால் மற்றவரிடமிருந்து வியர்வையுடன் நோய்க்கிருமிகள் அவரைப்பீடிக்கக் கூடும் அது தான் கையுறையைக் கழற்றாமல் கைகுலுக்குகிறார் என்பது ஒரு சுகாதார ஆதாரவாதிகளின் வாதம்.

இருகரம் கூப்பும் தமிழர் கலாச்சாரம்

இதன் காரணத்தினால் தானோ என்னவோ தமிழ்க் கலாச்சாரத்தின்படி கை குலுக்காது கைகளைக் கூப்பித் தீண்டாமல் வணக்கம் செய்கிறோம் என்பது ஆய்விற்குரியது. மஹாராணி கையுறையுடன் கைகுலுக்குவது என்கின்றபோது மஹாராணி பல வருடங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த வேளை இங்கிலாந்தில் கணிதப் பேராசிரியராக இருந்து பின்னர் அடங்காத்தமிழர் முன்னணி என்ற அரசியல் கட்சியின் தலைவராயிருந்த வவுனியா திரு சி. சுந்தரலிங்கத்துடன் கைகுலுக்கும் போது கையுறையை கழற்றிய பின்னரே மஹாராணி கைகுலுக்கியதாகக் கதையுண்டு. காரணம் இவர் மகாராணியாரின் கணித குருவாக இருந்தமையே என்பதெல்லாம் செவி வழித் தகவல்கள்.

சென்ற வருடம் கனடாவுக்கு மஹாராணியார் விஜயம் செய்திருந்த போது கனடாவின் சார்பில் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற வெள்ளையினத்தை சேர்ந்த சைக்கில் ஓட்டவீரன் ஒருவர் மஹாராணியுடன் கைகுலுக்கிவிட்டு அவரின் தோள் மேல் கைபோட்டு படம் எடுத்ததை பத்திரிகை நிருபர்கள் பத்திரிகைகளில் படத்தைப் பிரசுரித்து பெரிது படுத்தி எழுதினார்கள். ஏதோ நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விட்டதாக அவர்களின் செய்திகள் இருந்தன. தற்சமயம் கைகொடுத்தவர் ஒரு கறுப்பினத்தவராக இருந்திருந்தால் ராணியின் பாதுகாப்பாளர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது. இங்கு சம்பிரதாயம் எல்லாக் குடிமகனையும் ராணியின் பார்வையில் தன்னிலும் பல படிகள் குறைந்தவர்களாகக் கருதுகிறார் என்பதை தான் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இந்தச் சம்பிரதாயத்துக்கு ராணியை கடவுள் போல் கருதும் பலரின் மூடநம்பிக்கையே காரணம் என்பது ஒரு தரப்பு வாதம். இந்தப் போக்கைத் தவிர்த்து நடந்த டயானா மக்களின் இளவரசியானது இதனடிப்படையில்தான். இங்கிலாந்து மக்கள் பழம் சம்பிரதாயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். பழைய சம்பிரதாயங்களிலிருந்து காலத்துக் கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ள தயக்கம் காட்டுபவர்கள். ஆனால் அவ்வாறின்றிப் கனேடியர்கள் தடையின்றிப் பழகும் மனப்பான்மையுள்ளவர்கள். பழைய சம்பிரதாயங்களிலிருந்து விலகி காலத்துக்கேற்ப அனுசரித்துப் போகக் கூடியவர்கள். அதனால் தான் என்னவோ கனேடியரான அந்த விளையாட்டு வீரர் மஹாராணியின் தோளில் கைபோட்டு படத்துக்கு நின்றதைப் பாரதூரமான விஷயமாக கருதவில்லைப் போலும். ஆனால் இன்றைய ஊடகங்கள் ஒரு நிமிடமாவது நிதானமாக சிந்திக்க விரும்பாமல் வர்த்தக இலாப நோக்கத்தை மனதில் கொண்டு சாதாரண மக்களின் மனப் போக்கிற்கு இசைவாக இந்த விடயத்தை எழுதித் தீர்த்துள்ளார்கள். இது இன்னொரு வகைத் தீட்டு.

ஒலி ஒளி அல்ல - நிகழ்கால ஊடகவியல் குணாம்சம் - ஒழி ஒலி



தனிமனித நேயங்களும் பண்புகளும் என்றோ ஒழிந்து விட்டன. சகிப்புத் தன்மையும், நிதானமும் தீர்க்க தரிசனப் போக்கும் குறிப்பாக பத்திரிகா தர்மம் என்பனவெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டன. ஆபாசம் கவர்ச்சி போன்றனவற்றைத் தான் விட்டாலும் இலாப நோக்கம் அரசியல் ஆதாயம் ஆகியன மறைமுகமாக மக்களை எங்கோ இட்டுச்செல்கின்றன. இதுவே தற்கால ஊடகவியல் கலாச்சாரமாகிவிட்டது. ஒலியிலும் ஒளியிலும் பேச்சிலும் எழுத்திலும் நியாயம் என்பது மருந்துக்குக் கூட இல்லாத அளவு ஒழிந்து தீர்ந்து

விட்டது. மனச்சாட்சி, சமுதாய நலப் பார்வை, என்பன எங்கோ ஓடி ஒளித்துவிட்டன.

பேராசிரியர் சிவத்தம்பி - இயக்குனர் பாரதிராஜா

இதையே பேராசிரியர் திரு க சிவத்தம்பி அவர்கள் அண்மையில் யாழ் வீரசிங்கம் மண்டபத்து நிகழ்வொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார். விடுதலை வேட்கையை பிரிவினை வாதமென்று தெற்குப் பத்திரிகைகள் சித்தரித்து பெரும்பான்மை மக்களின் மனதில் விஷத்தை விதைத்ததையே அவர் சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது. இது இன ரீதியில் அமைந்தது. காவேரி நீர்ப் பிரச்சனையில் இயக்குனர் பாரதிராஜாவின் பேச்சை திரித்துப் பிரசுரித்த பத்திரிகைகளின் நோக்கங்கள் இரண்டு. பாமர மக்களின் எண்ண ஓட்டத்துடன் சார்ந்து எழுதுவது முதலாவதென்றால் அரசியல் இலாபம் கருதி எழுதுவது இரண்டாவதாகும்.

சாதித் தீட்டு

யாழ் குடா நாட்டில் கீழ்சாதி மக்கள் தம் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதை உயர்சாதி மக்கள் தடைசெய்த காலமுண்டு. இந்தத் தடை பல கோயில் கிணறுகளுக்கும் பொருந்தும். அனால் கிணற்றை இறைத்துத் துப்பரவு செய்வதற்கு மட்டும் தீண்டத்தகாதவர்கள் என்போரின் உதவியை உயர்சாதி மக்கள் நாடியதுண்டு. இதற்கு சுகாதாரத்தையே காரணமாகக் காட்டுவார்கள். அக்காலத்தில் பொருளாதாரவசதியும் படிப்பறிவும் குறைந்த கீழ்சாதிமக்கள் சுகாதாரமான வாழ்க்கை வாழவில்லை. அவர்கள் உண்ணும் உணவும் சுத்தமானதல்ல. தினமும் குளித்துப் புதிய ஆடை அணிந்து வாழ அவர்களுக்கு போதிய வருவாயும் வசதியும் இருக்கவில்லை. பெரும்பாலோர் கூலி வேலை செய்தே தம் சீவியத்தை நடாத்தினார்கள். கடும் வெய்யிலில் வேலை செய்வதினால் அவர்களின் தேகம் வியர்வையில் தோய்ந்து போய்க் கிருமிகள் குடிகொண்டிருக்க இடமுண்டு. அக்காரணத்தால் அவர்களை கிணற்றில் உள்ள குடிநீரை அசுத்தப் படுத்தாமல் இருப்பதற்காக அந்த முறையைத் தமிழ் சமூகம் கடைபிடித்திருக்கலாம். வழிபாட்டின் போது தமது துப்பரவற்ற நிலையை உணர்ந்து தம்மை துடைப்பான்களாக்கி சமுதாயத்தை துடைத்தவர்கள் தாமாகவே கோவில்களுக்குள் செல்லாமல் விலகி நின்றிருக்கலாம். இந்தப் பண்பாடு கால ஓட்டத்தில் வழமையாகி சம்பிர தாயமாகி இன்று ஒடுக்குமுறையாகிவிட்டதெனலாம். சுகாதார அடிப்படையில் எழுந்த இந்த சமூக ஆரோக்கிய விதிகளை உயர் குடியில் பிறந்தோம் என்ற தகுதியை மட்டும் கொண்டவர்கள் தம்மை உயர்த்திக்காட்ட அடக்கு முறையாக்கியிருக்கலாம்.

ஆனால் இந்த வாதம் மேல் சாதி மக்களுக்கும் பொருந்தும். பணவசதி யிருந்தாலும், படித்தவர்களாக இருந்தாலும், தாம் வாழும் வீடுகளைத் துப்பரவாக வைக்காமல் சுகாதாரமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆகவே சுகாதாரம் என்ற காரணம் சாதிகளுக்ககிடையே உள்ள இடைவெளிக்கு ஒரு காரணமாக காட்டப்படுவது ஏற்புடைத்தன்று. கோயில் களுக்குள் சென்று தாழ்ந்த சாதிமக்களை வணங்கவிடாத பாகுபாடு, இருதசாப்தங்களுக்கு முன் ஈழத்தில் இருந்துவந்த பிற்போக்கான சமுதாய வழக்கமாகும். கோயிலுக்கு வெளியே விக்கிரகத்தை ஊர்வலம் எடுத்துச் செல்லும்போதோ அல்லது தேர் இழுக்கும் போதோ அவர்கள் ஒதுங்கி நிற்கவேண்டிய ஒரு சூழ்நிலை. ஆனால் ஈழத்து விடுதலைப்போர் இந்தப் பிற்போக்கான கொள்கைகள்மேலும் போர் தொடுத்து ஓரளவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்று கூறுவதில் தவறில்லை. ஆனால் இதற்கு முன்னைய தலைமைகள் சில அறிவாளிகளான போதும் இங்கிலாந்து வரை சென்று கற்றும் இது விடயத்தில் கடினமானவர்களாகவே காணப்பட்டமை தவறிற்குத் துணைபோனதாகி விட்டது. ஏற்கனவே இதே மஹாராணியாரால் கையுறையின்றி கை குலுக்கப்பட்ட கணித மேதை பூஜ்ஜியத்திற்கும் பெறுமதி உண்டென்றும் அது ஒரு மாறிலி அல்ல மாறி என்றும் சரியான முறையில் நிருபித்த அதீத மேதை, தந்தை செல்வாவைப் பார்த்து நீர் ஒரு அகிம்சாவாதியில்லை ஒரு பயங்கரவாதி உமது செயற்பாடுகளினால் நான் வவுனியா எல்லையில் துப்பாக்கி தூக்க வேண்டியதாயிற்று. உண்மையில் உமது செயல் சாத்வீகத்திற்கு இட்டுச் செல்லாது என உரைத்த தீர்க்கதரிசி. ஆனால் மாவிட்டபுர விடயத்தில் சிறுபான்மைத் தமிழரை ஆலையத்துள் விடமுடியாதென நீதிமன்றம் வரை சென்றார். அவ்வாறே ஜி ஜி அவர்களும் இதே இறுக்கத்துடன் தான் வாழ்ந்தார். இதனால்தான் என்னவோ இவர்களால் ஏக போக தலைவர்களாக முடியாமல் போனது என எண்ணத்தோன்றுகிறது.

மறுபுறத்தில் சாதிச் சிக்கல் தமிழர்களின் மரபு என்பதைவிட குரு வடிவாய் இடையில் புகுந்த ஆரியச் சிக்கல் எனலாம். இந்த வழமையை நாம் தொடர்ந்து சம்பிரதாயம், மரபு என்ற நிலைக்கு இட்டுச் செல்வதா அன்றி இடை நிறுத்துவதா என்பதே இன்றைய சமுதாயத்தின் வினாவும், கடமை யுமாகும். தொழிற்பிரிவென்பது இல்லாமல் போய் யாரும் எத்தொழிலையும் செய்யலாம் என்ற நிலை தலைப்பட்டிருக்கும் இன்று, அதன் அவசிய அனாவசியங்கள் தெளிவானவை. தமிழ் என்றும், வள்ளுவன் என்றும், பாரதியென்றும் உரக்கக் கூவும் நாம் சாதி இரண்டொழிய வேறில்லை என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டோமா? இந்த மாமனிதர்களின் கனவுகளை நனவாக்கி விட்டோமா? சமுதாய இணைவைத்தான் விட்டாலும், தள்ளி வைத்தலையும், ஒதுக்கலையுமாவது தவிர்க்கக்கூடாதா?

மாதவிலக்குத் தீட்டு

யாழ்ப்பாணக் குடா நாட்டில மாதம் ஒரு முறை பெண்ணுக்கு வீட்டுக்குள் கரியினால் கீறப்பட்ட நீள் சதுரத்துக்குள் சிறைவாசம். வெளிக்குப் பாதுகாப்பிற்காக ஒரு உலக்கை வேறு. வயது வநதவர்களைக் கேட்டால் அவளைத் தொடாதே அவளுக்கு தீட்டு என்பார்கள். ஆனால் உண்மையில் உதிரம் வெளியேறி உடம்பின் ஆரோக்கியம் கெடாமல் இருப்பதற்காக ஓய்வு பெறுவதற்கு உடம்பின் இயல்பான செயல் அது. அதுவுமன்றி அத்தினங் களில் தாம்பத்திய உறவினைத் தவிர்க்கவும், கிருமிகள் மற்றவர்களுக்கு பரவாமல் தடுப்பதற்காகவும் கையாளப்பட்ட முறையாகும். அத்தினங்களில் நெற்றியில் குங்குமம் வைப்பதும் திருநீறு பூசுவதும் தவிர்க்கப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் வேலை செய்யும் பெண்ணொருத்தி இந்த முறையை கடைப்பிடிக்கக் கூடியதாக இருக்கிறதா? இத்தினங்களில் தலை வாருவது தலைமுடிக்கு நல்லதல்ல என்பது தற்போதைய கண்டுபிடிப்பு. இக் காலத்தில் தலை சீவுவதால் பெண்களின் மயிர்கள் உதிரும் என்பதுடன் பிறக்கும் பிள்ளைகளின் ரோமக் கட்டும் குறையும் என்பதை இன்று தான் விஞ்ஞானம் கண்டு பிடித்திருக்கிறது. ஆனால் அக்காலத்திலேயே மாத விலக்கு வரும் தினங்களில் தலை வாருவது கூடாதென்ற நம்பிக்கை இருந்து வந்தது கவனிக்கத் தக்கது.

இழவு வீட்டுத் தீட்டு

பல வகை தீட்டுகளில் இழவு வீட்டுத் தீட்டும் ஒன்று. ஒருவரின் மரண வீட்டுக்குப் போய்வந்தால் வீட்டுக்குள் போகமுன் துணிமணிகளை களைந்து தோய்பதற்கு போட்டபின்னர் குளித்து உடம்பைத் துப்பரவாக்க வேண்டும் என்பது இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. இரத்தத் தீட்டு என்பது ஆண்வழிவந்த தீட்டாகும். உதாரணத்துக்கு வெளிநாட்டில் இருப்பவர் ஒருவரின் சிறியதகப்பன் ஊரில் இறந்தால் அவருக்கு இரத்தத் தீட்டு என்பர். அதனால் அந்தியேட்டி முடியுமட்டும் கோயிலுக்குப்

போவதை அவர் தவிர்ப்பது வழக்கம். இதை சுகாதார காரணத்தினால் ஏற்பட்ட தீட்டு என விளக்கம் சொல்லமுடியாது. இதே போன்று வைத்திய சாலைக்குப் போய் சுகமில்லாத ஒருவரைப் பார்த்து வந்தபின் சிறு குழந்தைகளை கால் முகம் கழுவாமல் தூக்குவது கூடாது என்பது வழக்கத்தில் இருந்துவருகிறது. இதற்கும் சுகாதாரத்தை காரணமாகக் காட்டுவார்கள். ஆனால் மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்கள் இந்த ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிப்தில்லை. இறந்தாலும் தீட்டு, பிறந்தாலும் தீட்டு. எனக்கு தெரிந்த கனடாவில் உள்ள ஒரு பெண்மணியின் மருமகள் குழந்தையை லண்டனில் ஈன்றெடுத்தபோது போது அதனால் தனக்கு இரத்தத் தீட்டென சரஸ்வதி பூஜையை வீட்டில் வைக்க மறுத்துவிட்டார். அதெப்படி பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள உங்கனை தீட்டு பீடித்துக்கொள்கிறது என்று கேட்டேன். ''தூரமோ கிட்டவோ, அது தான் எங்கள் மரபு வழி வந்த இரத்த உரித்தை நிலைநாட்டும் தேசவழமை'' என்றார். இங்கு தீட்டுக்கு பதிலாக மரபு வழிவந்த கலாச்சாரத்தின் ஆக்கிரமிப்பு வெளிப்படுகிறது.

பிராமணர்கள் விதைத்த தீட்டு

தீட்டு என்ற தத்துவம் சுகாதாரத்தை குறிக்கோளாகக் கொண்டு பாவிக்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் வாழும் பிராமண வம்ச வழி வந்தவர்கள் இயல்பாகவே அன்று உண்மையில் அறிவோராக வாழ்ந்த அன்றைய பிராமணர்களுக்கு கொடுக்கப் பட்டமதிப்பை, இன்று தாங்கள் அந்தளவிற்கு மகிமையற்றவர்களாக இருந்தபோதும் முன்புகிடைத்த மரியாதையை வலிந்து பெற்றுக் கொள்வதறகாக தீட்டு சாதி போன்றவற்றை தவறாக பயன் படுத்துகிறார்களா. மதிப்பு வழங்கப்படுவது ஒன்று. எடுத்துக் கொள்ளப்படுமொன்றல்ல.

மனத் தீட்டு

தீட்டு பரிசுத்தத்துடன் இணைந்தது. பரிசுத்தம் உடம்பில் மட்டுமல்ல உள்ளத்திலும் இருக்கவேண்டும். சுயநலம், கள்ளத்தனம், அகங்காரம் , போன்றவை மனத்தீட்டை உருவாக்குகின்றன. உயர்சாதியைச் சேர்ந்த ஒருவன் தாழ்ந்த சாதிப் பெண்ணைக் கற்பழித்துவிட்டு கோயிலுக்குப் போய் வணங்கினால் அவன் தீட்டு என்பதற்கு ஆளாகிறானா?. வணங்கும் போது அவன் மனதை செய்த குற்றம் உறுத்திக்கொண்டே இருக்கும். உடம்பில் உள்ள தீட்டை நீக்கினாலும் மனதில் எற்படும் தீட்டை நீக்குவது மிக மிகக் கடினம். மூடநம்பிக்கையில் ஊறிய பலர் மனத்தீட்டுடன் உலாவுகிறார்கள். அதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆனால் மேற் கூறிய தீட்டுக்கள் அவர்களுக்கு பெரிதாகப் படுகிறது. தீட்டுக் கலாச்சாரம் சாதி வேற்றுமைக்கு ஊன்றுகோலாக இருக்கக் கூடாது. மூடநம்பிக்கை களுக்கு வித்திடக் கூடாது. ஆகவே தீட்டைப்பற்றி பேசமுன் புத்தியைத் தீட்டி அது வழக்கமுறைகளுக்கு பொருந்துகிறதா எனச் சிந்தித்து, பழமை வாதங்களிலிருந்து விடுபடுவோமாக!

ஒரு குறிப்பு


மாதவிலக்கை மாதவிடாய் என்றும் கூறும் வழக்குண்டு. சன் தொலைக்காட்சி தீபம் தொலைக்காட்சி ரி. ரி. என் தொலைக்காட்சி இவை மூன்றிலும் யோகா வகுப்புகளை நாளாந்தம் நடத்தும் ஆசனா ஆண்டியப்பன் நீண்டநாள் பேச்சுக்களி லிருந்து மாதவிலக்குக்கு மிகவும் பொருத்தமான ஒரு பதத்தை நான் தெரிந்து கொண்டேன். அவர் மாதவிடாய் என்று குறிப்பிடுவதில்லை. பதிலாக மாதாவிடாய் என்றுதான் குறிப்பிடுவார்.

விடாய் என்றால் தாகம் என்பது பொருள். ஒரு இளம்பெண்ணுக்கு எப்போ தாயாகத் தாகம் (தகுதி) ஏற்படுகிறதோ அப்போ இது ஏற்பட்டு எப்போ அத்தகுதியை இழக்கிறாளோ அப்போ அது நின்று விடுகிறது. அதைவிட பெண்களுக்கு இது சரியாக மாதாமாதம் வருவதில்லை. எவ்வளவு பொருத்தமான அர்த்தமுள்ள பதம். யோக நூல்களிலிருந்து இவர் இப்பதத்தைக் கற்றிருக்கலாம்.

விஸ்வாமித்ரன்

கருந்துளை (Black Hole)

சார்புக் கொள்கையை உலகுக்கு தந்த அயன்ஸ்டைன் (Einstien) என்ற பிரபல விஞ்ஞானியின் வீட்டின் சுவர் ஒன்றில் சிறிதும் பெரிதுமாக இரு துளைகள் இருந்தனவாம். பார்க்கும் போது கருப்புநிறத் துளைகளாக காட்சியளித்ததைக் கண்ட அங்கு வந்த ஒருவர். " இதென்ன இரண்டு கருந்துளைகள். ஒன்று சிறிது , மற்றது பெரிது என்று விஞ்ஞானியிடம் கேட்டாராம். அதற்கு அவர் " இது தெரியாதா உமக்கு?, பெரிய துளை என் பெரிய பூனை போய் வருவதற்கு. சின்னத் துளை என் சின்னப் பூனை போய் வருவதற்கு என்றாராம். இது நகைச்சுவைப் பகுதிக்கானது இங்கு எப்படி வந்தது என்று யோசித்து விடாதீர்கள். அயன்ஸ்டைனுக்கும் துளைக்கும் எவ்வளவு தொடர்பு இருந்தது என்பதைக் காட்டவே இதைக் குறிப்பிட்டேன். இதனால் அயன்ஸ்டைன் ஒரு அசடா என்றும் தீர்மானித்து விடாதீர்கள். விஞ்ஞானிகள் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்தும் போது அவர்களின எண்ணங்கள் அதில் முற்றாக ஊறிவிடும். உதாரணத்துக்கு ஆர்க்கிமிடிஸ் தன் தத்துவத்தை கண்டுபடிக்கும் போது குளிக்கும் தொட்டியில் நிராடிக்கொண்டிருந்தார். அனேகமாக நிர்வாணமாக குளிக்கும் போது சிந்தைனைகள் கொடிகட்டிப் பறக்கும். அது மாதிரி அவர் தான் விடைகாணமுடியாது தவித்த கேள்விக்கு விடை கிடைத்ததும் சந்தோஷத்தில் வெளியே "யுரேக்கா, "யுரேக்கா" என்று சத்தம் போட்டுக் கொண்டு நிர்வாணமாக ஓடியதாக அவரைப்பற்றிய கதையுண்டு. இத்தகைய விஞ்ஞானிகள் இயற்கையின் இரகசியங்களை வெளியுலகுக்கு எடுத்துச் சொல்லியிருக்காவிட்டால் நாம் இன்றும் கல் யுகத்திலேயே வாழ்ந்திருப்போம். இக் கருந்துனை பற்றிய கட்டுரையை வாசிக்கும் போது உங்களுக்கு புலனாகும். இது ஒரு கற்பனையில்லை



கருந் துளையின் தத்துவம்

பிரபஞ்ச வெளியில், ஒரு பகுதியில் சடப்போருள்கள் எல்லாம் ஒரிடத்தில் இறுக்கமாக குவிந்திருப்பதால் அதன் ஈர்ப்புச் சக்தியின் பாதிப்பில் இருந்து அருகே உள்ள சடப்பொருட்கள் தப்பமுடியாது. ஒளிக் கதிர்கள் கூட அதன் ஈர்ப்பிலிருந்து தப்ப முடியாது அதனுள் இருந்து வெளியேறவும் முடியாது. அவ்வாறான விண்ணகத்தில் உள்ள சிறு பகுதியே கரும் துளை என்பர். பொருட்கள் அந்தபகுதிக்குள் உறிஞ்சி எடுக்கப்பட்டால் அவ்வளவு தான் வெளியே வரமுடியாது.

கரும் துளை ஈர்ப்புச்சக்தியின் மூலம் உருவாகிறது. கரும் துளைகளின் கண்டுபிடிப்பை சேர் ஐசைக் நியூத்தன் என்ற விஞ்ஞானியின் காலத்தில் இருந்து ஆராயவேண்டும்.

நியூத்தன் பிரபஞ்ச ஈர்ப்புசக்தியின் (Universal Gravitation) விதியைக் கண்டுபிடித்தவர். இவ்விதியின் படி பிரபஞசத்தில் உள்ள எல்லாப் பொருட்களுக்கும் ஈர்ப்புச்சக்தியுண்டு. இச்சக்தி சிறிது பெரிது என்ற பாகுபாடின்றி எல்லாப் பொருட்களையும் தாக்குகிறது. ஒளியையும் கூட இச்சக்தி பாதிக்கும். ஒளியானது பெரிய பொருட்களால் ஈர்க்கப்படுகிறது. இதுவே Diffraction என்ற ஒளிவிலகளை எற்படும் நிகழ்வை விளக்குகிறது.

பியரி லப்லாஸ் (Pierre Laplace) என்ற பிரான்ஸ் தேசத்து விஞ்ஞானி 1798 1825 ல் பிரபஞ்சத்தில் உள்ள சூரிய மண்டலத்தின் கிரகங்களின் இயக்கத்தைப்பற்றிய கொள்கையை விண்ணக ஈர்ப்புச் சக்தி விதியின் அடிப்படையில் எழுதினார். கணிதத்தின் மூலம் ஈர்ப்புச் சக்தியினை அவர் விளக்கினார். சூரியன் ஒரு நட்சத்திரம். இது போன்று கோடிக்கணக்கான ஒளிரும் நட்சத்திரங்கள் பிரபஞ்சத்திலுண்டு. பூமியைப் போன்று அடர்த்தியானதும் , சூரியனின் விட்டத்தை விட 250 மடங்கு கூடிய விட்டமுள்ள ஒரு ஒளிரும் நட்சத்திரத்தில் இருந்து, ஒளியானது ஈர்ப்பு விசைகாரணமான பூமியில் வாழும் எம்மை வந்தடையாது. அதனால் மிகப்பெரிய ஒளிரும் வான்வெளியில் உள்ள பொருட்கள் எம் கண்களுக்குத் தென்படாது எனப் பியரி லப்லாஸ் தன் ஆராச்சியின் போது முடிவுக்கு வந்தார். நியூத்தனின் விதியினைப்பாவித்து விடுபடு திசைவிரைவைக் (Escape Velocity) கணித்தார். இத் திசைவிரைவுடன் ஒரு பொருள் நடசத்திரத்தையோ அல்லது பூமி போன்ற கிரகத்தை விட்டு வெளியேறுமாகில் நட்சத்திரத்தின் அல்லது பூமியின் ஈர்ப்புச்சக்தியில் இருந்து விடுபடும். இத்திசைவிரவை விட வெளியேறும் திசைவிரைவு குறைவாக இருப்பின் ஈர்ப்புச் சக்தி திரும்பவும் பயணத்தை ஆரம்பித்த இடத்துக்கு கொண்டு வந்து விடும். பூமியின் விடுபடு திசைவிரைவு வினாடிக்கு 11.2 கி.மீ ஆகும். விண்வெளிப் பொருள் ஒன்றின் திண்மை (Mass) கூடியும் ஆரம் (Radius) குறைவாக இருப்பின், அதாவது பொருளின் அடர்த்தி கூடுதலாக இருப்பின் மேற்பரப்பிலிருந்து விடுபடு திசைவிரைவு கூடுதலாக இருக்கும். ஏனெனில் பொருண்மை கூடும் போது ஈாப்புச் சக்தி கூடுகிறது. கிரக மையத்திலிருந்து தூரம் கூடும் போது ஈர்ப்புச்சக்தி குறைகிறது. கணித சமன்பாட்டின்படி

F = ஈர்ப்புச்சக்தி , m_1 = கிரகத்தின் பொருண்மை . m_2 = பொருளின் பொருண்மை r= கிரகத்தின மையத்திலிருந்து பொருளின் தூரம் , ஆகில்

$F\ (m_1 x m_2)/r^2$

இந்த சமன் பாட்டின் படி இரு பொருட்களுக்கிடையே உள்ள தூரம் கூடும் போது ஈர்ப்பு விசை இரு மடங்காக குறைகிறது. பொருளின் பொருண்மை கூடும் போது ஈர்ப்பு விசை கூடுகிறது.

சந்திரனில் விடுபடும் திசைவிரைவு வினாடிக்கு 2.4 கி.மீ வியாழன் கிரகத்தில் வினாடிக்கு 61 கி.மீ. சூரியனில் இது வினாடிக்கு 620 கி.மீ. பூமியின் திணிவைப் போன்ற பெறுமானம் உள்ள நடசத்திரம் சூரியனின் விட்டத்தை விட 250 மடங்கு கூடுதலாக இருப்பின் அந்நட்சத்திரத்திலிருந்து ஒளி வெளியேறாது. அதாவது அந்த நட்சத்திரத்தை நாம் பூமியிலிருந்து பார்க்க முடியாது. இது பிரமிக்கத்தக்க அனுமானமாகும்.

சக்தியும் கரும் துளையும்

ஒன்றுமில்லாமல் சக்தியை தோற்றுவிக்க முடியாது. பொருள்,

எதிர் பொருள் ஆகியவையுடன் தொடர்புள்ள நேர் எதிர் என்ற (Positive , Negative energy) சக்திகள். எதிர் சக்தியுடன் இணைந்த எதிர்பொருட்களின் வாழ்வு சொற்ப காலமே. ஒரு சாதாரண நேர் சக்தியினைக் கொண்ட பொருள் பெரும் திணமையுள்ள பொருளுக்கருகே இருப்பின் சக்திகுறைவாகயிருக்கும். ஈர்புச்சக்தி காரணமாக வெகு தூரத்திலிருக்கும் போது சக்தி கூடியதாகயிருக்கும். கருந்துளைக்குள் ஈர்ப்புச் சக்தி கூடியகாரணத்தால் ஓர் நேர் பொருள்கூட எதிர் சக்தியினைக் கொண்டதாக மாறலாம். அயன்ஸ்டைனின் சமன்பாட்டின் படி $E = Mc^2$

இங்கு சக்தி $= E$, $M =$ பொருளின் திண்மம். $c =$ ஒளியின் வேகம்.

எதிர் சக்தி கருந்துளையிற்குள் புகுந்தால் அதன் திண்மத்தை குறைக்கும். கருந்துளையின் திண்மம் குறையும் போது அடிவானத்தின் பரப்பு குறையத்தொடங்கும். வெப்பநிலை கூடத்தொடங்கும். அதனால் கதிரியக்கம் (Radiation) அதிகரிக்கத் தொடங்கும். அதன் காரணமாக கருந்துளையின் திண்மைக் குறைவு விரைவாகும். திண்மம் மிகச் சிறிய அளவையடைந்தவுடன் கருந்துளையானது திடீர் என மில்லியன் அணுக்குண்டுகளின் வெடிப்பினால் வெளியேற்றப் படுமட சக்தியுடன் மறைந்துவிடும். கருந்துளை (Photons) எனப்படும் ஒளியங்களை உருவாக்கிறது. சூரியனின் திணமத்திலும் பார்க்க பல மடங்கு பெரிதான கருந்துளைகள் மிகவும் குறைந்த வெப்பநிலை உடையவை, ஆகையால் திண்மமம் இல்லாத பொருட்களை உருவாக்குகிறது.

ஈர்ப்பு ஆரை (Gravitational Radius)

அயன்ஸ்டைனினதும் (Einstein) நியூத்தனினதும் ஈர்புச்சக்தி கொள்கைகளில் வித்தியாசம் உண்டு. ஐயன்ஸ்டைனினது கொள்கையின் ஈர்ப்புச் சக்தியானது நியூத்தனின் கொள்கையின் ஈர்புச்சக்தியிலும் பார்க்க சற்று அதிகம். இந்த வித்தியாசம் கிரகத்தின் ஆரையைச் சுருக்கும் போது வெகு வேகமாக அதிகரிக்கும். இவ்விசை முடிவற்ற பெறுமானத்தை கிரகத்தின் ஒரு குறிப்பிட்ட ஆரையின் பெறுமான அளவுக்கு சுருங்கும் போது அடையும். இதனை ஈர்ப்பு ஆரையென்பர். பூமியின் இதன் பெறுமானம் சுமார் 1 செ.மீ. சூரியனின் ஈர்ப்பு ஆரை 3 கி.மீ.

நேரமும் ஈர்ப்புச்சக்தியும்

அயன்ஸ்டைனினது கொள்கையின்படி ஈர்புச்சக்தியானது நேரத்தை பாதிக்கக்கூடியது. ஈர்ப்புச் சக்தி கூடிய நிலையில் நேரம் மெதுவாகச் செல்லும். நேரம் உறுதியானதும் மாற்றமடையாததும் என்பது புனைக்கதை என்றார் ஐயன்ஸ்டைன். நேரம் என்பது ஒரு பொருளின் இயக்கத்தில் தங்கியுள்ளது. நடசத்திரத்தில் இருக்கும் ஒருவருக்கும் வெகு தூரத்தில் இருக்கும் ஒருவருக்கும் இரு சம்பவங்களுக்கிடையிலான நேரத்தில் வித்தியாசமுண்டு. திசை விரைவு மாறும் போது நேரம் மாற்றம்மடைகிறது. விண்வெளியில் ஒளியின் வேகத்துடன் ஒப்பிட்டுபார்க்குமளவுக்கு பயணம் செய்யும் விண் வெளிகப்பல் ஒன்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பூமியின் மேற்பரப்பில உள்ள பொருளின் நேரம் மெதுவாக மாற்றம்மடையும். இந்த விரிவை நேர விரிவு (Time dilation) என்பர். இதனை கீழ்கண்ட சமன்பாடு கொண்டு விளக்களாம்

$$t = t_0 / (1 + v^2/c^2)^{0.5}$$

இங்கு $t =$ நேரமாற்றம் , $v =$ பொருளின் திசை விரைவு.

$c =$ ஒளியின் வேகம்.

பொருளின் வேகம் ஒளியின் வேகத்தின் பெறுமானத்தை அடையும் போது நேரம் மாற்றம் மிக பெரிய மாற்ற நிலையையடையும். ஆகவே ஒரு பொருள் ஆகக் கூடய அளவு செல்லக்கூடிய திசைவிரைவு ஒளியின் விரைவாகும்.

ஈர்ப்புச்சக்தியானது கேத்திரகணித பண்புகளையும் மாற்றவல்லது. இதனால் ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூட்டுத்தோகை 180 பாகையாகாது. அவ்வாறே ஒரு வட்டத்தின் சுற்றளவு 2r ஆகாது.

கரும் துளையின் பருமன் என்ன?

பருமன் கரும் துளையின் திண்மையும் எவ்வளவு இடத்தை வாண்வெளியில் அது எடுத்திருக்கிறது என்பதை பொருத்தது. மிகப்பெரிய நட்சத்திரங்களின் சுருக்கத்தின் விளைவால் கரும் துளை தோன்றுகிறது. அந்த நடசத்திரத்தின் திண்மை ஒரு சிறு இடத்துக்குள் அடங்குவதால் ஈர்ப்பிசை மிகப்பெரிய அளவுக்கு அதிகரித்து ஒளிவெளியேறமுடியாத நிலையையடைகிறது. ஆகவே ஒர கரும் துளையின் பொருண்மை ஒரு மிகப்பெரிய நட்சத்திரத்தின் பொருண்மைக்கு சமனாகும். சூரியினின் திண்மத்தின் பத்து மடங்காகும் (10^{31})கிலோகிராமாகும். வாண்வெளியில் வின்மீன் கூட்டங்களின் மையத்தில் பல கருத் துளைகளுண்டு. கரும் துளையொன்றின் மையத்தருகே மனித உடல் சென்றால் ஈர்ப்புவிசையினால் அது கிழித்தெரியப்படும். ஆரம்பத்தில் ஈர்ப்புச்சக்தியின் பாதிப்பை அவ்வளவுக்கு உணர முடியாது. ஆனால் மையத்தை நெருங்க நெருங்க உடம்பின் பாரத்தை உணர முடியாது. கரும் துளைக்கு ஒரு அடிவானம் உண்டு. இதற்கு வெளியே ஈர்ப்புச்சக்தியின் பாதிப்பு அவ்வளவு இருக்காது. அவ்வானத்துக்குள் சென்றால் அவ்வளவு தான், வெளியேவரமுடியாது.

சூரியன் கரும் துளையாக மாறுமா?

சூரியனுக்கு கரும் துளையாக மாறும் சாத்தியம் தற்பொத இல்லை. சூரியனிலும் பார்க்க பல மடங்கு பெரிதான நட்சத்திரங்கள் தான் கரும் துளைகளாக மாற வாய்ப்புண்டு. பயப்படாதீர்கள். ஐயாயிரம்கோடி ஆண்டுகளுக்கு சூரியன் இப்படியே இருக்கப் போகிறது. அதன் பின் பேரளவுள்ள சிவப்பு நட்சத்திரமாக (Red Giant Star) மாறி புதன் வெள்ளி போன்ற கிரகங்களை விழுங்கி விடும் பூமியில் வாழ்வது கடினமாகிவிடும். கடல்கள் உஷ்ணம் கூடி கொதிக்கத் தொடங்கும். அதன் பின் சூரியன் வெள்ளை குள்ள நட்சத்திரமாக (White Dwraf Star) மாறி தன் உயிரை முடித்துக்கொள்ளும். தற்செயலாக சூரியன் கரும் துளையாக மாறினால் என்ன நடக்கும்?. எங்கும் இருளாகவும் விறைக்கும் குளிராகவும் இருக்கும். பூமியும் மற்றைய கிரகங்களும் கரும் துளையினால் கவரப்படமாட்டா. காரணம் சூரியன் கருந்துளையாக மாறினால் அதனால் தோன்றும் அடிவானம் என்ற எல்லை 3 கி.மீ தூரமாகும். அகையால் கரும் துளையின் ஈர்ப்புச் சக்தி பூமியையும் மற்றைய கிரகங்களையும் பாதிக்கமாட்டாது.

ஒளி வருட தூரம் (Light Year)

வான்வெளிசாஸ்திரத்தில் ஒளி வருட தூரம் (Light Year) என்பது அடிக்கடி பாவிக்கப்படும் தூரமாகும். ஒளியானது வினாடிக்கு 300,000 கி.மீ வேகத்தில் செல்கிறது. ஒரு வருடத்தில. 365ஒ24ஒ60ஒ60 வினாடிகளாகும். இந்த நேரத்தில் கிட்டத்தட்ட ஒளியானது 9,500,000,000,000 கி.மீ தூரம் செல்லும். இதுவே ஒளிவருட தூரமாகும். மில்கி வே (Milky Way) என்ற பெயருடைய வின் மீன் கூட்டம் 150,000 ஒளி வருடத் தூரத்தில் உள்ளது. வான் அலகு (Astronomical Unit AU) என்பது பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள சராசரி தூரமாகும். இது கிட்டத்தட்ட 93 மில்லியன் மைல்களாகும். இந்த அலகினையும் வானசாஸ்திரத்தில் பாவிப்பார்கள்.

வெள்ளைத் துளை (White Hole) **என்றால் என்ன?**

சார்புக் கொளகைக்கு (Relativity Theory) ஒரு ருசிகரமான கணிதத் தொடர்புடைய பண்புண்டு. நேரம் சமச் சீராகது என்கிறது. அதாவது வேரம் முன்னோக்கி செல்வது போல் பின் நோக்கியும் செல்லலாம். இந்த தத்துவத்தை வைத்துத்தான் S G Wells என்பவர் ஒரு

விஞ்ஞான நாவலை எழுதினார். அது சினிமாவில் படமாக வந்தது. இந்த முன்னோக்கி செல்லும் நேரத்தில் கரும் துளை தோன்றி பின நோக்கிச் செல்லுமாகில் நேலத்தில் வெள்ளைத் துளை தோன்றும். கரும் துளை எல்லாப் போருட்களையும் உறிஞ்சி எடுக்கும் இயல்புடையது. ஆனால் அதற்கு எதிர்மாறாக வெளளைத் துளை எல்லாப் பொருட்களையும் உள்ளெடுக்காது துப்பும் இயல்புடையது. இதனை கணித சமன் பாட்டின் மூலம் விளக்கலாமே தவிர உண்மையில் அது வான்வெளியில் கருந்துளை போன்று இருக்கும் துளையல்ல. எவ்வாறு கரும் துளையினை அழிக்கமுடியாதோ அவ்வாரே வெள்ளைத துளையினைத் தோற்றவிக்கமுடியாது.

புழுத் துளை (Worm Hole)

பெயரைப் பார்த்து இது புழுக்கள் நிறம்பிய துளையென நினைக்க வேண்டாம். மின்னேற்றம் உள்ள கருந்துளை சுழலத் தொடங்கினால் எப்படி இருக்கும். தலை சுத்துகிறதா? ஆமாம் சிக்கலானது தான். இத்தகைய கரும் துளையின் உள் பகுதியானது வெள்ளைத் துளையின் உள் பகுதியுடன் இணைவதால் புழுத் துளை உருவாகிறது. ஆகவே கரும் துளைக்குள் சென்றால் வெள்ளைத் துளையினால் வெளிவரலாம். இரண்டும் ஒரு வழிப்பாதைகளாக இயங்குகின்றன. வெள்ளை துளை கருந்துளையிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் ஒன்றாகும். ஏன் வேறு ஒரு பிரபஞ்சத்திலும் கூட இருக்கலாம். ஆகவே புழுத்துளையானது எங்களினது பிரபஞ்சத்தில் இருந்து விடுபட்டதொன்றாக இருக்கலாம். புழு துளையானது சென்ற காலத்தில் இருக்கும் ஒன்றாகலாம். என்ன சிந்தித்துப் பார்க்க தலை சுத்துகிறதா?. இதோடு நிறுத்திக் கொள் வோம். சற்று வான்வெளியில் உங்கள் சிந்தனைகளைத் தியானத்தின மூலம் சிறகடித்து பறக்க விடுங்கள். எல்லாம் புரிந்து விடும்.

பூமியில் ஆழமான துளை

ரஷ்யாவில் கொலா தீபகற்பப் பகுதியில் பூமியில் உலகின் மிக ஆழமாக மனிதன் தொண்டிய துளை உள்ளது. 1970ல் துளையிட ஆரம்பித்து 1995-ல் முடிவடைந்த இந்த துளையின் ஆழம் 12,262 மீட்டர் (40,000 அடிகளுக்கு மேல்) இதுவே தற்போதைய உலக சாதனை. இந்த துளை பெட்ரொலுக்காகவோ அல்லது கனிம வளத்துக்காகவோ் ஏற்படுத்தப்பட்டதல்ல. பூமியின்; ஆழதில் நிகழும் தட்டுப்பிளவுகளை ஆராயவும் பூமியின் மையப்பகுதிகளில் எனவென்ன வெதியியல் பொருட்கள் உள்ளன என்று அறியவுமே இத்துளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆழத்தில் 270 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவான பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பாறைகளை ஆராய்ந்தால் பூமி உருவான கால நிலவரத்தை அறிய முடியும். கொலா துளையின் ஆழத்தை மெலும் 10,000 அடிகள் வரை நீடிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சிக்கின்றனர். இதற்கு முந்தைய சாதனையாக அமெரிக்காவின் ஒக்லஹொமா என்ற இடத்தில் 31,500 அடிகள் வரை துளையிடப்பட்டுள்ளது.

உயரமான ஜீன்ஸ்

தென் கொரியாவில் உலகிலேயே உயரமான ஜீன்ஸ் பாண்ட் விளம்பரத்துக்காக ஒரு தனியார் நிறுவனம் சார்பில் 30 மீட்டர் உயரத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டு உள்ளது. வைக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிக உயரமான ஜீன்ஸ் இது தான் என கின்னஸ் புத்தகத்திலும் இது இடம் பிடித்து உள்ளது.

மேடையில் மனிதநேயம்

பராசக்தி சுந்தரலிங்கம் – சிட்னி

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவர்"

சிட்னியிலுள்ள **"மனித நேயம்"** என்னும் அமைப்பு சமீபத்தில் அரங்கேற்றிய நாடகங்களைப் பார்த்த போது, இந்தப் பாடல் வரிகள் நினைவுக்கு வந்தன.

Shobhanam Drama Creations என்ற கலைக்குழுவினர் டுயரபாபைபெ'கோ டுயரபாபைெ என்ற பெயரில், எங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள குறைகளை நகைச்சுவையாக நடித்துக் காட்டினார்கள்.

"வித்தியாசமான பாணியில் ஐந்து குறு நாடகங்களை உங்களுக்குத் தருகிறோம். வாய்விட்டுச் சிரிப்பதோடு கொஞ்சம் சிந்தியுங்கள்" இதுதான் அவர்களுடைய நோக்கம்.

இன்று நாங்கள் ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறோம். எல்லோருமே ஓரளவு வசதியாக வாழ்ந்து கொண்டும் இருக்கிறோம். ஆனாலும், சுயநலம், போட்டி, பொறாமை, பிறரிலே குறை காணுதல் போன்ற குணங்களை எங்களால் கைவிட முடியவில்லை. "என்னுடைய குடும்பம், என்னுடைய வீடு", என்ற "என்னுடைய" குறுகிய வட்டத்திலிருந்து எங்களால் வெளியே வர முடியவில்லை.

"தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்"

இப்படி இந்த "வேடிக்கை மனிதரை"ப் பற்றிப் மனம் நொந்து பாடுகிறார் பாரதிதாசன்.

நாமெல்லோரும் மற்றவரின் மனச் சாட்சியைப் பற்றி நினைக்கிறோமே தவிர, எங்களுக்குள் இருக்கும் மனச் சாட்சியை மறந்து விடுகிறோம். இவற்றைப் பார்த்த அன்பர் ஒருவர் "இந்த மனிதரைப் பார்த்தால் சிரிப்புத் தான் வருகுதையா" என்று எள்ளி நகையாடி நாடகம் படைத்திருக்கிறார். இவர் தான் வைத்திய கலாநிதி ஜெயமோகன். இவர், மனித சுபாவத்தை Human behaviour நன்கு விளங்கியவர். ஒரு நல்ல மருத்துவர், சிறந்த உளவியலாளராகவும் இருப்பார் என்பார்கள். இந்த உளவியலாசிரியரின் கற்பனையில் பிறந்தவை தான் "நாய்களும் நாங்களும், Washing dirty linen in public, ஒரு வைத்தியர் பைத்தியமாகிறார், ஒரு மனிதரும் நான்கு மகாத்மாக்களும், மற்றும் customers (f~;lmers)" என்ற நகைச்சுவை நாடகங்கள்.

இந்த நாடகங்களிலே ஆசிரியர் சிறந்த உத்தி ஒன்றைக் கையாண்டு வெற்றி காண்கிறார். ஒவ்வொருவருடைய மனச்சாட்சியையும் ஒரு பாத்திரமாக மாற்றி சிந்திக்க வைத்துவிடுகிறார். இந்த மனச்சாட்சி மேடையிலே தோன்றுகிறது. கதையின் முன்னரும், பின்னரும், இடையிலும் புகுந்து, நாடகத்தை நகர்த்திச் செல்கிறது. நாடகம் முடிந்த பின்னரும், மனச்சாட்சியை மேடையிலே பார்க்கிறோம்.

“நீங்கள் சும்மா சிரித்துவிட்டுப் போக முடியாது. உங்கள் ஒவ்வொருவரின் காரிலும் நான் ஏறி வருவேன் நீங்கள் ஒருவருமே என்னிடமிருந்து தப்பிவிட முடியாது” என்ற அச்சுறுத்தலோடு, ஆனால் சிரித்தபடி, மனச்சாட்சி விடைகொடுக்கிறது.

டாக்டர் ஜெயமோகன் அவர்களே இவற்றை நெறிப்படுத்தியும் இருக்கிறார். இவருடைய வழிகாட்டலில் நல்லதொரு கலைஞர் குழு இந்த நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றியிருக்கிறது.

தாய்நாட்டிலுள்ள அனாதைச் சிறுவர், மற்றும் முதியோர் நலனுக்காகப் பாடுபடும் “மனித நேயம்” அமைப்புக்கு மிகப் பொருத்தமான, மனிதநேயம் மிக்க நாடகங்கள் இவை. இவற்றைச் சிந்தித்து, எழுதி நடித்தவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் இன்று உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றுவிட்டார்கள். போகுமிடமெல்லாம் கோயில்கள் கட்டி, பஜனை பாடி ஆன்மீகத்தை வளர்க்கிறார்கள். தாய் நாட்டிலிருந்து உணவுப் பொருட்களை வரவழைத்து பலசரக்குக் கடை வைத்து நடத்துகிறார்கள். கோயிலுக்கும், கடைக்கும் போகும் மக்கள் சிலரின் விந்தையான செயல்களை டாக்டர் ஜெயமோகன் உன்னிப்பாகக் கவனிக்கிறார். மனச்சாட்சியை கேள்வி கேட்க வைத்துவிடுகிறார்.

கோயில் திருவிழாவிலே, சாப்பாட்டுக்காகத் தட்டத்தை ஏந்தியபடி, (அன்னதானம்) வரிசையிலே நகர்ந்து செல்லும் “பெரிய மனிதர்” சிலர் பொறுமை காக்க முடியாமலும் தொண்டர்களைக் குறை கூறியபடியும் பேசும் “சின்னக் கதைகளை” வைத்தே அவர் ஒரு நாடகம் படைத்து விடுகிறார். நல்ல மனிதர் ஒருவர் இந்தப் “பெரிய மனிதர்களிடையே” அகப்பட்டு படும் பாட்டையும் காட்டி சிந்திக்க வைக்கிறார்.

ஒரு கடைக்காரரும், ஒரு வைத்தியரும் மக்கள் அவர்களுக்குக் கொடுக்கும் தொல்லையால் மனநோயாளிகளாய்ப் போவதை வேறொரு நாடகம் படம் பிடித்துக் காட்டியது. பிள்ளையை ரியூ'ன் வகுப்பிலே விட்டுவிட்டுப் பொழுதைப் போக்குவதற்காகக் கடைக்கு வரும் ஒருவர், பயனற்ற கதைகளைக் கதைத்து வியாபாரத்தைக் குழப்புவதையும், எள்ளுருண்டையை எடுத்துச் சுவைப்பதையும், வெண்டிக்காயை ஒடிப்பதையும் கவனிக்கும் இந்த நாடக ஆசிரியர், வெள்ளைக்காரர் நடத்தும் கடைகளில் ஒழுங்காக நடக்கும் அதே தமிழ் மக்கள், தமது சொந்த மக்களை மதிக்க மறுக்கிறார்களே என்று வருந்துகிறார். வைத்தியர் ஒருவர் அவசரமாக வீட்டிற்குப் போகும் நேரத்திலே, வந்து, அவருடைய பொன்னான பொழுதை வீணடிக்கும் இரண்டு நோயாளிகள், கடைசியிலே அவருடைய குடும்ப வாழ்க்கையையே குழப்பி விடுவதைக் காட்டி, ஒவ்வொருவரின் மனச் சாட்சியையும் உலுப்பி விடுகிறார்.

நாடகம் தொடர்கிறது - இங்கே, குடும்பப் பிரச்சனையைப் பகிரங்கமாக்கும் இரண்டு சகோதரிகளையும், சினிமா நடிகை ஒருவர் தொலைக்காட்சியிலே தோன்றி அவர்களது பிரச்சனையை மேலும் சிக்கலாக்குவதையும் காட்டி, எம்மவரின் சினிமா மோகத்திற்கும் நல்லதொரு அடி கொடுக்கிறார் இந்த ஆசிரியர்.

பாரதி பாடிய “நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை செய்வாரடி கிளியே, வாய்ச்சொல்லில் வீரரடி” என்று பேசிப் பேசியே பொழுதைப் போக்கும் வேடிக்கை மனிதரை இங்கே பார்க்கிறோம்.

மனிதர் மனிதரை விமர்சித்ததைக் காட்டியவர், மனிதரை நாய்கள் விமர்சித்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்கிறார். மூன்று நாய்கள், அவற்றிலே ஒன்று தெருநாய். மற்றைய இரண்டும் தங்கள் எஜமானரின் போலியான உறவுகளைப் போட்டு உடைக்கின்றன. மனிதரிலும் பார்க்கத் தாங்கள் எத்தனையோ விதத்தில் உயர்ந்தவை என்று காட்டுகின்றன. தெருநாய் “விட்டு விடுதலையாகி நிற்பாய்” என்று “சுதந்திரம்” பேசுகிறது! இது ஒரு புது மாதிரியான நாடகம். ஆசிரியரின் கற்பனைத் திறமைக்குக் கிடைத்த பெரிய வெற்றி.

டாக்டர் ஜெயமோகனின் கற்பனை, எழுத்தாற்றல் மாத்திரமன்றி, நடிகர்களின் நடிப்புத் திறனும் இந்த நாடகங்களின் வெற்றிக்குக் காரணம். ஜெயமோகனும் அவரது சகோதரி திருமதி பாமினி ஸ்ரோரரும் பிரதான பாத்திரங்களிலே எல்லா நாடகங்களிலும் வந்தார்கள். அவர்களின் அங்க அசைவு, முகபாவம் யாவற்றிலும் நடிப்பின் முதிர்ச்சியைப் பார்க்க முடிந்தது. டிங்கிரி மெனிக்காவாக வந்த ஜெயமோகன் ஒரு சிங்களப் பெண்ணாகவே மாறி தமது பேச்சாலும் நடிப்பாலும் எல்லோரையும் கவர்ந்து விட்டார்.

இலங்கை வானொலியிலே “தணியாத தாகம்” நாடகம் மூலம் புகழ் பெற்றவர் திருமதி பாமினி. இவர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சினிமா நடிகையாக வந்து, சினிமா மொழி பேசி ஒரு கலக்குக் கலக்கிவிட்டார். இவர் ஒரு பிறவி நடிகர். இவர் மேடையிலே தோன்றிய போதெல்லாம் ரசிகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

நாகராஜா நரேந்திரன் கடைக்காரராக வந்து மிகவும் இயல்பாக நடித்து எல்லோரினதும் பாராட்டைப் பெற்றார். க்'டஅநச ஆக வந்த கருணாகரன், விளம்பர இடைவேளையில் விளம்பர Model ஆக நடித்த தேவயானி ஆகியோரின் நடிப்பு மெச்சும்படியாக இருந்தது.

மனோகரன், பரிமளநாதன், ஹரி பாலச்சந்தர், சிவகுமார், நிமலேந்திரன், ஸ்ரீலீமி, அனு, சாம்பவி, என்று இந்த நாடகத்தில் நடித்த அனைவருமே சிறப்பாக நடித்திருந்தார்கள்.மனச்சாட்சியாக மேடையிலே தோன்றிய திருமதி சிவாஜினி சச்சிதானந்தா, எல்லோருடைய மனச்சாட்சியையும், தனது வசீகரமான பேச்சினால், உலுப்பிவிட்டார். இது மனச்சாட்சிக்குக் கிடைத்த வெற்றி.

இந்த நாடகங்கள் சிட்னியிலே மேடையேற்றப்பட்டிருந்தாலும் இவை கூறிய செய்தி நாம் எங்கிருந்தாலும் எமக்குப் பொருத்தமாயுள்ளது. மண்டபத்தில் நிறைந்திருந்த எல்லா வயதினருமே இவற்றை ரசித்து மகிழ்ந்ததைப் பார்க்க முடிந்தது. பலரின் வேண்டுகோளுக்கும் இணங்க இவற்றைத் திரும்பவும் மேடையேற்றினார்கள் என்றால் இந் நாடகங்களின் பிரபல்யத்தைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? ”சிரிக்கவும் சிந்திக்கவும்” என்பதோடு “மனிதராகவும் வாழ வேண்டும்” என்று 'மனித நேயத்தினர்' கூறுவது எங்கள் காதுகளிலே கேட்கிறது!

காலம்

கோடைகாலம்
குளிர்காலம்
வசந்தகாலம
இக்காலங்களை விட
அவளின் பருவகாலம் தான்
எனக்குப் பிடித்தமான காலம்!

சி. ந. இராமகிருஷ்ணன் – தமிழ்நாடு

தமிழகத்தில் தமிழுக்காகப் போராடும் தமிழர்கள்!

கலாச்சாரம், மொழி போன்ற தனது உன்னத அடையாளங்களைத் தமிழர்கள் இழந்து விடக்கூடாது என்பதில் இப்போது தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறது தமிழ்நாட்டில் உள்ள தமிழ் பாதுகாப்பு இயக்கம்.

பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழ் தேசிய இயக்கம், மூவேந்தர் முன்னணி கழகம் போன்ற தமிழகக் கட்சிகள் ஒன்றிணைந்துதான் இப்படி ஒரு அமைப்பை தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறது. திருச்சியில் இந்த இயக்கம் நடத்திய மாநாட்டில் மூன்றாவது மொழிப் போர் இயக்கம் என்றே இதனைப் பிரகடனப்படுத்தினார்கள் தலைவர்கள்.

தமிழ்த் திரைப்படங்களுக்கு தமிழில்தான் பெயர் வைக்க வேண்டும் என்ற இந்த இயக்கத்தின் கோரிக்கைக்கு ஓரளவு பணிந்தே விட்டது தமிழ்த்திரை உலகம். ஆம். 'அமுதே' 'தவமாய் தவமிருந்து' 'கற்க கசடற' என்றெல்லாம் தமிழ்த் திரைப்படங்களுக்கு இப்போது அழகிய தமிழில் பெயர் சூட்ட ஆரம்பித்து விட்டார்கள் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்கள்.

"தமிழ் வாழ்க" "தமிழைக் காப்போம்" என்ற கோஷங்களை எழுப்பிய படி கைதானார்கள் தலைவர்கள்.

அடுத்த கட்டமாக, தமிழ் பாதுகாப்பு இயக்கம் கையில் எடுத்திருக்கும் விஷயம் - தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை அளிக்காத அல்லது தமிழைப் புறக்கணிக்கிற வணிக நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளில் உள்ள பிறமொழி எழுத்துக்களை தார் பூசி அளிக்க வேண்டும் என்பதுதான். தாங்கள் அறிவித்தபடியே, மே 23ம் தேதி தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் காப்பாளர் ராமதாஸ், பழ நெடுமாறன், தொல். திருமாவளவன், டாக்டர் சேதுராமன் போன்றவர்கள் நீளமான குச்சிகளில் குஞ்சத்தைக் கட்டிக்கொண்டு, கருப்பு மை குடுவைகளுடன் களத்தில் இறங்கினார்கள். சென்னை அரசு பொது மருத்துவமனை அருகே, ஆங்கில எழுத்துக்கள் மற்றும் இந்தி எழுத்துக்கள் மட்டுமே இடம் பெற்றிருந்த வங்கி, சிமெண்ட் நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளில் இருந்த அந்தப் பிறமொழி எழுத்துக்களை அழித்தார்கள். இந்தப் போராட்டத்துக்குத் தடைவிதித்திருந்த தமிழக அரசு, தலைவர்கள் தடையை மீறினால் கைது செய்வதற்கு காவல்துறையினரை அங்கே தயார்நிலையில் நிறுத்தியிருந்தது. பிறமொழி எழுத்துக்கள் கொண்ட விளம்பரப் பலகைகள் மீது தலைவர்கள் யாரும் கை வைத்துவிடக்கூடாது என்பதில் அதீத அக்கறையும் எடுத்துக்கொண்டது. ஆனாலும் கூட, தமிழ் பாதுகாப்பு இயக்கத்தினர் காவல்துறைக்கு போக்கு காட்டிவிட்டு, இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி விட்டார்கள். அதனைத் தொடர்ந்து "தமிழ் வாழ்க" "தமிழைக் காப்போம்" என்ற கோஷங்களை எழுப்பிய படி கைதானார்கள் தலைவர்கள். அன்று மாலையே விடுதலை ஆனார்கள்.

இந்தப் போராட்டம் குறித்து டாக்டர் ராமதாஸ் இப்படிச் சொல்கிறார் - "இந்தப் போராட்டம் எந்த மொழிக்கும் எதிரானது அல்ல. இன்னும் சொல்லப் போனால் ஆங்கிலத்துக்கு எதிரானது அல்ல. அரசுக்கும் எதிரானது அல்ல. தமிழ் மொழிக்கு ஆதரவான போராட்டம் இது. தமிழ்நாட்டில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிற போராட்டம் இது. தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை இடம் கொடுக்கப்படாவிட்டால் பிறகு வேறு எங்கே தமிழுக்கு முதன்மை இடம் கிடைக்கும்?" என்று கேள்வியும் எழுப்புகிறார்.

தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்களிலும் இதே தேதியில் இந்தப் போராட்டத்தை நடத்தி கைதானார்கள் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தினர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட விருதுநகரைச் சேர்ந்த மாடன் என்பவரைச் சந்தித்தோம்.

"தமிழகத்தில் வணிக நிறுவனங்கள், கடைகளின் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உத்தரவே இருக்கிறது. ஆனால், யார் கடைப்பிடிக்கிறார்கள்? பெற்ற தாயைப் போற்றி வணங்கும் கலாச்சாரத்துக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். ஆனால், பெற்றவர்களையே உதாசீனப்படுத்துகிற கலாச்சாரமும் இங்கே நுழைந்துவிட்டது. அதே போல்தான், அன்னிய மொழியின் ஆதிக்கமும் இங்கு நன்றாகவே வேர் விட்டிருக்கிறது. 'தமிழ் மொழியை வைத்துக் கொண்டு என்ன சாதித்து விட முடியும்?' என்றெல்லாம் கேள்வி கேட்கும் இழி நிலையும் உருவாகிவிட்டது. தமிழின் அருமை தமிழர்களுக்கே தெரியவில்லையே..." என்று கவலைப்பட்டார் அவர்.

தாய் மொழியாம் தமிழைக் காக்க மீண்டும் போராடத் துவங்கிவிட்டார்கள் தமிழர்கள்!


உங்களுக்குத் தெரியுமா?

கும்பலின் கற்பழிப்பு

பாகிஸ்தானை சேர்ந்த 17 வயது பெண்ணை ஒரு கும்பல் கடத்திச் சென்று ஒரு வீட்டில் 37 நாட்கள் அடைத்து வைத்து அவருக்கு போதை ஊசி போட்டு மீண்டும் மீண்டும் இந்த கும்பல் அவரை கற்பழித்தது. இந்த தகவல் போலீசுக்கு தெரிந்ததும் கும்பலிடம் இருந்து இளம் பெண்ணை போலீஸ் மீட்டது. ஆனால் போலீஸ் நிலையத்தில் இருந்த ஒரு சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ்காரர்கள் மீண்டும் அந்த பெண்ணை கற்பழித்தனர். எனவே இளம் பெண்ணும் அவரது பெற்றோரும் பாகிஸ்தான் பாராளுமன்றம் முன் உடலில் பெட்ரோல் ஊற்றி தங்களை தாங்களே எரித்துக் கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

கண்ணீர்

உப்பு நீர்
அரித்துவிடும் என்பார்கள்
இன்னுமா அரிக்கவில்லை
உன் இதயப் பாறையை
என் கண்ணீர்!


UNLOCK YOUR DREAMS!
STOP RENTING!
Why pay rent,
when you can BUY a house of your own!
Century 21
People's Choice Realty Inc.

புனித லூசியா வைத்திய நிலையம்

HURONTARIO & DUNDAS



டாக்டர் விக்ரர் ஜோன் பிகராடோ

M.D., C.C.F.P.

DR. VICTOR J. FIGURADO

M.D., C.C.F.P.



குவியத்தின் வளர்ச்சிக்கு நல்வாழ்த்துக்கள்!



St. Lucia's Medical Center

3085 HURONTARIO STREET, SUITE 208
MISSISSAUGA, ON. L5A 4E4

Office Hours :
Mon, Tue, Thu : 10:00am - 06:00pm
Wed, Fri : 09:00am - 01:00pm
Sat : 09:00am - 12:00am

Tel : 905.206.1966

Fax : 905.206.1635

பொன் – கனடா

சூப்பி

ஜெயபாலசுப்பிரமணியம் என்பது அவனுடைய நீண்ட பெயர். ஜெயா, பாலா, மணி என்று அவனைச் சுருக்கமாக கூப்பிடுவதை விட எல்லோரும் "சூப்பி" என்று தான் பட்டப்பெயர் வைத்து கூப்பிடுவார்கள். அதற்கு காரணமும் உண்டு. யாழ்ப்பாணத்தில் பட்டப் பெயர் வைத்து அழைப்பது கலாச்சாரமாக நிலவி வந்த காலமது. சிலருக்கு பட்டப்பெயர் சொல்லி கூப்பிட்டால் கோபம் வரும். உதாரணத்துக்கு எதற்கு எடுத்தாலும் எதாவது குறை சொல்லுவதையே வழக்கமாக கொண்ட நடராஜா என்பவரை நொட்டை நடராசா என்று அழைப்பர். அப்படி கூப்பிட்டால் அவருக்கு படுகோபம் வரும். சபாபதியார் வீட்டு வளவில் பல விதமான பலா மரங்கள் இருந்ததினால் அவருக்கு மக்கள் சூட்டிய பெயர் பிலாக்காய் சபாபதி. சைக்கிளில் கொழும்புத்துறையில் இருந்து வந்து மீன் விற்பவனின் கண்கள் எப்போதும் சிவந்திருந்தபடியினால் இரத்தக் கண்ணன் என்ற பட்டப்பெயரை அவனுக்குச் சூட்டினார்கள் அவனது வாடிக்கையாளர்கள். அவனது உண்மைப் பெயர் என்னவென்று பலருக்குத் தெரியாது. தரமுள்ள மீன்களை நெருப்பு விலையில் அவன் விற்றதும் அந்தப் பெயர் வரக் காரணமாகும். அளுத்கடையில் கூலி வேலை செய்து பின்னர் ஊரோடு வந்து சண்டியனாக மாறியவனுக்கு "அளுத்கடைச் சண்முகம்" என்ற நாமம் சூட்டப்பட்டது. கிடைத்த பட்டப்பெயர்களை ஒரு அடையாளக் குறியாகப் பலர் விரும்பினர்.



சூப்பி என்னோடு கூடவே கிராமத்துப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பு முதல் படித்தவன். அவனுடைய அப்பா வேல்முருகு ஒரு முருகபக்தர். புகையிலைத் தரகு அவர் தொழில். கல்யாணமாகி பல வருடங்களாகியும் பிள்ளைகிடைக்காததால் பல முருகன் கோயில்களுக்கு பிரதட்டனைக் காவடி எடுத்தவர் வேல்முருகு. யாரோ ஒரு சன்னியாசியின் ஆலோசனைப்படி கதிர்காமத்துக்குப் பாதையாத்திரை செய்து வந்ததன் பயன் தான் மூன்றாம் மாதமே மனைவி கருத்தரித்தாள். ஜெயபாலசுப்பிரமணியன் என்று தனது குலம் தளைக்கப் பிறந்த ஒரே பிள்ளைக்கு பெயர் வைத்தார் வேல் முருகு. பிறந்த போது சுப்பிரமணியன் கொழு கொழுவென்று கை நிறைந்த குழந்தை. ஆனால் அவன் பார்வையிலோ எதையோ இழந்துவிட்டவன் போன்று ஒரு ஏக்கம். பிறந்து அடுத்தநாளே பெருவிரலைச் சூப்பத் தொடங்கினான். தாய்ப் பால் குறைவாக்கும் அது தான் அவன் கை சூப்புகிறான் என்றாள் வேல்முருகுவின தாயார். "அதில்லை அவன் வயறு நிறம்ப உவள் பால் கொடுக்கிறாள் இல்லை" என்று குறைப்பட்டாள் வேல்முருகுவின் மாமியார். வளர்ந்ததும் உந்தப் பழக்கம் சரியாகிவிடும் என்றனர் அனுபவத்தை வைத்துச் சில கிழவிகள்.

சுப்பிரமணி குழந்தை சுபாவம் கொண்டவன். வீட்டில் பல வருடங்களுக்குப் பிறகு பிறந்த ஒரே பிள்ளையென்பதால் அவனுக்கு செல்லம் அதிகம். வயது பதினாறு ஆகியும் அவன் தாய்க்கருகில் தான் படுக்க வேண்டும் என்று அடம் பிடிப்பான். அதுவும் தாயின் பழைய சேலை ஒன்றை கன்னத்தில ஒத்தனம் கொடுத்தபடி கை சூப்பியபடி தூங்குவான். ஒரு நாளாவது தூங்கும் போது அநத மிருதுவான பருத்திச் சேலை இல்லாமல் தூக்கம் அவனுக்கு வராது. சில சமயம் கட்டிலோடு சீறு நீர் கூட கழித்துப்போடுவான். பாவம் தாய் காந்திமதி. எல்லாவற்றையும் மகனுக்காக பொறுத்துக்கொள்வாள்.

சுப்பிரமணிக்கு சிறுவயது முதற்கொண்டே இடது கை பெருவிரல் சூப்பும் பழக்கம் இருந்தது. சிறுவயதில் அதை நிறுத்த தாய் எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள். அவன் கேட்கவில்லை. "என்னடா ராசா விரல் சூப்புவதை எப்ப நிறுத்தப் போறாய். ஸ்கூலிலை உன்னை பகிடி பண்ணமாட்டினமே என்று சொல்லிப் பார்த்தாள் காந்திமதி. அவன் கேட்டபாடாக இல்லை. பெருவிரலுக்குத் துணி சுத்திப் பார்த்தாள் காந்திமதி. ஆதுவும் சரிவரவில்லை. வேப்பெண்ணையை பூசிப்பாத்தாள். அது மாற்றாக அமையவில்லை. ஊரில் மகனைப்பற்றி விசாரித்தவர்கள் முதலில "என்ன காந்திமதி சுப்பிரமணி கைசூப்புவதை விட்டிட்டானே. வழக்கத்திலை பிள்ளையள் ஏழு எட்டு வயதுக்கு மேலே கைசூப்புவதை விட்டிடுங்கள். உவன் வயது பதினாறு ஆகியும் விடாமல் சுப்பிறான். அவன்டை பல்லுக் கூட மிதந்து கொண்டு வருகுது போல கிடக்கு" வக்கனை சொல்வது காந்திமதிக்கு எரிச்சலைக் கொடுத்தது. காந்திமதிதான் என்ன செய்வாள்? பாவம் இருப்பதோ ஒரே பிள்ளை. அதுவும் தவம் இருந்து பெற்ற பிள்ளை. உள் நாட்டு வைத்தியரிடம் கொண்டு போய்க் காட்டினாள். அவர் உதுக்கு மருந்து கிடையாது. அவனாகவே பலர் பகிடி பண்ணத் தொடங்க விட்டுவிடுவான் என்றார். பல் மிதக்கவும் கூடும் இந்த பழக்கததை விடு என்று அவனுக்கு அன்பாக எடுத்துச் சொல்லுங்கள். வற்புறுத்தி ஒன்றும் மாற்றமுடியாது. அவனாகவே உணர்ந்து விட வேண்டும்" என்றார் வைத்தியர்.

காந்திமதிக்கு தனது மகனுகு வருங்காலத்தில கலியாணம் பேசும் போது அவனது மிதந்த முன் இரண்டு பற்களைப் பார்த்துவிட்டு மாப்பிளளை மம்பட்டி பல்லன் எனக்கு வேண்டாம் என்று சம்மதிக்காமல் போய் விடுவர்களோ என்ற கவலை ஒரு பக்கம். வேல் முருகுவுக்கு அதைப் பற்றிச் சொன்ன போது "உதுக்கேன் இப்ப கவலைப்படுகிறாய். அதுக்கு இன்னும காலம் இருக்கு. காலம் வரும் போது பல் வைத்தியரிடம் காட்டி திருத்திப் போடலாம். நீ அவன்டை விரல்சூப்பும் பழக்கத்தை மாற்றப்பார். அவனுக்கு இருக்கிற சொத்துக்காக பெண்கள் தானாகவே அவனை முடிக்க வருவினம். நாங்கள் என்ன அவையளிடம் சீதனமே கேட்கப் போகிறோம்": என்பார்.

வகுப்பில் எப்பவும் சூப்பி எனக்கு பக்கத்தில தான் அமருவான். விரல் சூப்பும் போது தனது காதின் தோடு போடும் மிருதுவான பகுதியை நெருடியவண்ணம் இருப்பான். பாவம் என்று நானும் பொறுத்துக் கொள்வேன். "ஏண்டா உனக்கு பயித்தியமா?. அவனது விரல் சூப்பும் பழக்கத்துக்கு துணைபோகிறாயா என்று என் நண்பர்கள் என்னைத் திட்டுவார்கள். இது அவனுக்கு தாலாட்டுவது போல ஒரு நிலையை உருவாக்கிக் கொடுக்கிறது போலும். ஒரு நான் எனது காதை வருடியபடியே விரலை சூப்பிய படி வகுப்பில தூங்கிவிட்டான் சுப்பிரமணி. நான் என்ன செய்வது என்று தெரியாது திகைத்தேன். அதுவும் தமிழ் வாத்தி தம்பிப்பிள்ளையரின் வகுப்பு. அவரோ கண்டிப்பான பேர்வழி..

அவன் தலையிலை ஓங்கி ஒருகுட்டு வைத்து அவனை எழுப்படா" என்று எனக்கு கட்டளையிட்டார் தம்பிப்பிள்ளையர். நான் மெதுவாக அவனது விரல்களை எனது காதில் இருந்து எடுத்து அவனை நித்திரையில் இருந்து உசுப்பினேன். அவனோ ஏதோ கனவு கண்டவன் மாதிரி உளறிக் கொண்டு வாயில் இருந்து வழிந்த வீணியைத் துடைத்தவாறே எழும்பினான். அன்று அவனையும் என்னையும் வகுப்பில் இருந்து வெளியேற்றிவிட்டார் ஆசிரியர்.

வகுப்பில் இப்படித் தூங்கினாலும் பரீட்சையில் நல்ல புள்ளிகள் வாங்கினான் சூப்பி. அதுவும் கணக்கில் நூற்றுக்கு நூறு புள்ளிகள். அதனால் அவன் வகுப்பில் தூங்கினாலும் கணக்கு வாத்தியார் ஒன்றும் சொல்வதில்லை. எப்படி அவனுக்கு அப்படி தலை முட்டிய மூளை என்பது எல்லோருக்கும் புரியாத புதிராக இருந்தது. எந்த கடினமான கணக்கையும் விரல் சூப்பிய படி சிந்தித்து மற்றவர்களுக்கு முன்னர் விரைவில் போட்டு விடுவான். அவனது மூளை துரிதமாக வேலை செய்வதற்கு விரல் சூப்பும் பழக்கம் துணைபோகிறதோ என்னவோ. பாடசாலையில் படித்த மாணவிகள் கூட அவனிடம் இருந்து ஒதுங்கியே போனார்கள். ஒன்று அவனது வாயில் அடிக்கடி வழிந்த வாய் நீர் காரணமாக இருக்கலாம். அடுத்தது அவனது மிதந்த பற்கள். சுப்பிரமணி அதைப்பற்றி கவலைப்படவில்லை. அவனுக்கு நான் மாத்திரமே நண்பனாக இருந்தேன். அதனால் அவனது தாயார் அவனைப்பற்றி என்னிடம் விசாரித்து அறிவாள். தன் மகன் படிப்பில் கெட்டிக்காரன் அதுவும் கணக்கில் விண்ணன் என்றறிந்ததும் அவளுக்கு அதை விட வேறு சந்தோஷமில்லை. சூப்பி அதிகம் பேசமாட்டான். அடிக்கடி எதுவது சிந்தனையில ஒரு மூலையில் அமர்ந்தபடி விரல் சூப்புவான். "ஏண்டா ராசா உன்ரை நண்பர்களோடை போய் வெளியிலை விளையாடன்" என்று தாய் வற்புறுத்தினாலும் போகமாட்டான். எங்கே அவர்கள் தன்னைக் கேலிசெய்து ஒதுக்கிவைத்துவிடுவார்களோ என்ற காழ்ப்புணர்ச்சி. உயர்தர வகுப்புப் பரீட்சையில நான்கு பாடங்களிலும் நல்ல புள்ளிகள் அவனுக்குக் கிடைத்து கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு பட்டப்படிப்புக்கு இடம் கிடைத்தும் அவன் போக மறுத்துவிட்டான். அதற்கு முக்கிய காரணம் எங்கே தாயை விட்டு பிரியவேண்டுமே என்ற பயம். எனது ஆலோசனையின் பேரில் இங்கிலாந்து கணக்காளர் பரீட்சையான ஐ.சி.எம்.ஏ எழுதி ஐந்து பகுதிகளிலும் மூன்று வருடங்களுக்குள் திறமையாக அவன் சித்தி பெற்றது ஊரில் எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இருபத்தி மூன்று வயதாகியும் களவாக விரல் சூப்பும் சுப்பிரமணிக்குள் இவ்வளவு திறமையிருக்கிறதா. "இவன் ஏன் பட்டப் படிப்பு படித்து உயர் அரச பதவி நாடிப் போகவில்லை? அதற்கெல்லாம் காரணம் காந்திமதியும் வேல்முருகுவும் தான். அவர்களுக்கு எங்கே மகன் தங்களைவிட்டு தூரத்துக்குப் போய்த் தனியாகச் சமாளிக்க முடியாமல் கஷ்டப்படுவானோ என்ற பயம்" என்று ஊர் பேசிக் கொண்டது. சுப்பிரணியின பிடிவாதக்குணமும் தாய்க்கு அருகே தான் எப்போதும் இருக்க வேண்டும் என்ற நிலையும் அவர்களுக்கு தெரியவா போகுது

ஒருபடியாக வேல்முருகு பாராளுமன்ற உறுப்பினரைப் பிடித்து, பணம் செலவு செய்து ஊருக்குள் உள்ள கூட்டுறவு ஸ்தாபனத்தில் மகனுக்கு உதவிக் கணக்காளர் வேலை எடுத்துக்கொடுத்தார். எம் பி யின் ஆள் என்றபடியால் அலுவலகத்தில் அவனுக்கு அவ்வளவுக்கு கட்டுப்பாடு இருக்கவில்லை. அவனது பிரச்சனை உயர் அதிகாரிக்கு தெரிந்தபடியால் எம்.பியின் கட்டளைப்படி அவனுக்கு வேலை செய்ய ஒரு சிறு அறை ஒழுங்கு செய்து கொடுத்தார். அது அவனுக்கு தான் நினைத்த நேரம் யாரும் கவனியாதவாறு விரல் சூப்ப வசதியாக இருந்தது. சுப்பிரமணியன் நினைத்த நேரம் விரல் சூப்பினாலும் வேலையை மட்டும் சரிவரச் செய்து வந்ததால் அவனை உயர் அதிகாரிகளுக்கு அவனைப் பிடித்துக்கொண்டது. கணக்கில் உள்ள சில பிழைகளை கண்டுபிடித்துக் காட்டி தன் திறமையை வெளிக்காட்டினான். ஒரு நாள் சூப்பி எப்படி புது வேலையில் இருக்கிறான் என்று பார்க்க அவனது அலுவலகத்துக்குப் போனேன். அவனின் அறைக்குள் என்னைப் போக பியோன் விடவில்லை. "ஐயா ஏதோ பிசியாய் இருக்கிறார்" என்று என்னைத் தடுத்து நிறுத்திவிட்டான். நான் பக்கத்தில் இருந்த போனில் சுப்பிரமணிக்கு நான் வந்திருப்பதாக அறிவித்ததும் உள்ளே போக அனுமதி கிடைத்தது.

"என்னடா சூப்பி, வேலை எப்படி போகுது. உனக்குத் தனி அறை கூட தந்திருக்கினம். இனி உன்பாடு குசால்தான்" என்றேன். அவன் ஒன்றும் பேசாது இருந்தான். "என்னடா உனக்கு வேலை பிடிக்கவில்லையா?. நல்ல சம்பளம் கிடைக்குமே?" என்றேன். பதிலுக்கு அவன் 'எனக்கு வீடு தான் பிடிக்கும். அம்மாவை பின்னேரம் மட்டும் பார்க்க முடியாது." என்றான் அலுப்போடு. "போகப் போகக் கலியாணம் முடித்ததும் எல்லாம் உனக்குச் சரியாகிலிடும். ஒன்றுக்கும் நீ யோசியாதே" என்று அவனுக்கு ஆறுதல் சொன்னேன். இந்தத் தாய்ப் பாசமும் விரல் சூப்பும் பழக்கமும் இவனை எங்கே கொண்டு போய் விடுமோ என்ற யோசித்தவாறு வெளியேறினேன்..

******

ஒரு நாள் சூப்பியின் தாய் காந்திமதியை சந்தித்த போது கவலை தோய்ந்த முகத்தோடு இருந்தாள். "என்ன மாமி இப்படி இருக்கிறியள் ஏதும் மகனாலை பிரச்சனையா?"

"அதில்லை தம்பி. அவனது மிதந்த பல்லும் விரல் சூப்பும் பழக்கமும் அவனது திருமணத்துக்கு தடையாக இருக்கிறது. யாரும் பெண் கொடுக்க வரமாட்டினமாம். இர்ணடொரு இடத்தில அவனை பார்த்துவிட்டு ஏதோ சாக்கு பொக்குச் சொல்லிவிட்டினம். பிறகு தான தெரியவந்தது பெண் இவனை வேண்டாம் எண்டிட்டாள் எண்டு. நாங்கள் இரண்டு பேரும் கண்முட முன் நல்ல ஒருத்தி கையிலை பிடித்துக் கொடுத்திட்டால் எங்களுக்கு நிம்மதி."

எனக்கு என் தூரத்து சொந்தக்காரியான நிர்மலா நினைவுதான் வந்தது. அவளும் சிறுவயதில விரலை சூப்பியவள் தான். அதனாலோ என்னவோ பற்கள் சற்று ஒழுங்கான வரிசையாக இல்லை. அவளை அழகி என்று கூற முடியாவிட்டாலும். அமைதியானவள். வீணாக சண்டை சச்சரவுக்குப் போகாதவள். தானும் தன்பாடும் என்று இருப்பாள். பாவம் லண்டன் மாப்பிள்ளை என்று ஒழுங்கு செய்து கடைசி நேரத்தில் அவன் இவளின் படத்தை பார்த்துவிட்டு முடியாது என்று மறுத்துவிட்டான். சூப்பியைப் போல் அவளுக்கும் நாலைந்து பேசி வந்தும் சரிவரவில்லை. ஏன் அவள் சூப்பிக்கு பொருத்தமானவளாக இருக்கக் கூடாது என்று நினைத்தேன். நான் சொன்னால் அவளது பெற்றோர்கள் மறுக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். என் மேல் அவளுக்கு சகோதர பாசம் வேறு. நான் எடுத்த முயற்சி வீணாகவில்லை. இரண்டு மாதங்களில் சுப்பிரமணியன் நிர்மலா கழுத்தில் தாலியைக் கட்டினான். திருமணம் ஆடம்பரம் இன்றி சில பேர் முன்னிலையில் இரகசியமாக கோயிலில் நடந்தேறியது. தாய் காந்திமதி நான் செய்த உதவிக்காக என் கைகளை பிடித்து கண்ணீர் விட்டபடி "தம்பி நீ செய்த இந்த உதவியை நான் ஒருநாளும் மறக்கமாட்டன்". எங்கே என் மகனுக்கு குடும்ப வாழ்க்கை இல்லாமல் போய் விடுமோ என்று நானும் அவரும் கவலை பட்டனாங்கள். இனியாவது அவன் திருந்துவானா பார்ப்போம்" என்றாள்.

திருமணம் நடந்து முடிந்து மூன்றாம் நாள் சுப்பிரமணியின் தாயை நான் சந்தித்தபோது அவள் என்னைக கண்டவுடன விம்மி விம்மி

அழத்தொடங்கினாள்.

"என்ன மாமி ஏன் அழுகிறீகள. என்ன நடந்தது?"

"அதையேன் கேக்கிறாய் தம்பி உவன் சுப்பிரமணி முதலாம் இரவண்டே மனைவியோடை படுக்காமல் எங்கடை அறைக்குள் வந்து எண்டை கட்டிலிலை படுத்திட்டான் முந்திபோல. நானும் அவரும் எவ்வளவு மன்றாடி கேட்டும் அவன் அசையவில்லை. மனுசிக்கு முன்னாலையும் வெட்கமில்லாமல குழந்தைப் பிள்ளை போல் விரல சூப்பிகிறான். பாவம் பெடிச்சி. அதையெல்லாம் என்னிடம் வந்து சொல்லக் குறைபடவில்லை. முகத்தையும் நீட்டிக் கொண்டிருக்கவில்லை. அவனோ அவளோடு கதை குறைவு. கேட்டதுக்கு மாத்திரம் ஒரு சில வார்த்தைகளில் பதில் சொல்லுகிறான். அவன் போக்கு எனக்கு பிடிக்கவில்லை."

"ஒன்றும் யோசியாதையுங்கோ மாமி. போகப் போக எல்லாம் சரி வரும். நிர்மலா ஒரு நல்ல பெண். அவளும் பத்து வயது மட்டும் விரல் சூப்பினவள் தான். தாயோடை தான் பெரிய பிள்ளையாகும் மட்டும் படுத்தவள். காலப் போக்கில் மாறிவிட்டாள். அவளுக்கு தெரியும் எப்படி உங்கடை மகனை தன் வழிக்கு கொண்டு வருவது என்று".

"அப்படியா. ஏதும் பிரச்சனையால் இரண்டு பெரும் பிரிந்து வாழாமல் இருந்தால் சரி."

காந்திமதி யோடு கதைத்துவிட்டு நான் திரும்பிய நான் போது சாய்மானக் கதிரையில் சுப்பிரமணி புத்தகம் ஒன்றை வாசத்தபடி விரல் சூப்பிக்கொண்டிருந்தான். எனக்கு அவனை பார்க்க எரிச்சலாக வந்தது. "என்னடா சுப்பிரமணி நீ இப்போ புது மாப்பிளளை என்றதை மறந்திட்டியா. நீ இன்னும் குழந்தைப் பிள்ளை என்ற நினைவா. உதையேல்லாம் மறந்திடு. உன்னைக் கவனிக்க நல்ல மனைவி ஒருத்தி கிடைத்திருக்கிறாள் என்று சந்தோஷப்படு. அவள் மனம் நோகாமல் நடக்கப்பார்" என்றேன்.

"அவரை ஒன்றும் சொல்லாதையுங்கோ. நானும் முந்தி உப்படிதான் பதினாறு வயது மட்டும் இருந்தனான் என்று உங்களுக்கு தெரியுமே. அப்போது ஒரு நாள் எனது சிகேதியின் அண்ணர் தனக்கு தெரிந்த இரண்டு விரல் சூப்பிய ஒருவருக்கு விரலில் கட்டி வந்து பரிசோதித்து பார்த்தபோது கன்சர் என்று விரலை எடுக்க வேண்டி வந்ததாம் என்று சொன்னார். சினேகிதியின் அண்ணர் ஒரு வைத்தியர். எனக்கும் அப்படி நடக்கலாம் என்ற பயத்தில் அன்றிலிருந்து விரல் சூப்புவதை விட்டனான்"

அவளது கதையில் உண்மையில்லை எனபதும் கணவனை மாற்றவே கதை அளக்கிறாள் என்று எனக்கு விளங்கியது. அவள் சொல்வதைக் கேட்டு வாசித்த புத்தகத்தை கீழே போட்டுவிட்டு விரலை வாயில் இருந்து எடுத்து விட்டு என்னைப் பாத்தான் சுப்பிரமணி. இவள் கதை உண்மையா என்பது போலிருந்தது அவனது பார்வை.

"என்னடா பார்க்கிறாய் சுப்பிரமணி. அவள் சொன்னது உண்மைதான். எனக்குத் தெரிந்த இரண்டு பேருக்கு உதே மாதரி நடந்திருக்கு . அதில ஒருவனுக்கு கன்சர் பரவி வலது கையில் மூன்று விரல்களையும எடுத்துவிட்டார்கள். இரண்டு விரல்களை ஓரே சமையம் வாயுக்குள் வைத்துச் சூப்பியதால் அவனது விரலுக்கு இரத்த ஓட்டம் குறைந்த காரணத்தால் அப்படி நடந்தது" என்று சில கற்பனையும் கலந்து அவள் சொன்ன கதையை பெரிதாக்கிச் சொன்னேன். ஒரு நல்லகாரியம் நடப்பதற்காக பொய் சொல்வதில் குற்றமில்லை என்றது என் மனது.

"இந்தாருங்கோ மணி. இந்த கோப்பியை குடியுங்கோ என்று தான் கொண்டுவந்த கோப்பியை கணவனிடம் கொடுத்தான நிர்மலா. தான் சூப்பிய விரலலை விறைத்தபடி பார்த்துக் கொண்டிருந்த சுப்பிரமணி அவளிடம் இருந்து கோப்பியை வாங்கினான். அவனுக்கு கிடைத்த புது பெயர் "மணி". தூரத்தில கோயில் மணி ஓசை கேட்டது. இனி ஒருவரும் அவனை "சூப்பி" என்று கூப்பிடும் விதத்தில் அவன் நடக்கமாட்டான் எனற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது.

"சரி மணியான நிர்மலா எனக்கு நேரமாச்சு நான் வாறன்" என்று சிலேடையாக சொல்லிவிட்டு அவர்களிடம் இருந்து விடை பெற்றேன்.

இரண்டு வருடங்களுக்கு மேல் எப்படி உருண்டோடியது என்றே எனக்கே தெரியவில்லை. துபாயுக்கு ஒரு வேலை கிடைத்து போய் இரண்டு வருடத்துக்கு பின்னர் ஊர் திரும்பிய எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. முருகன் கோயில் வாசலில் சுப்பிரமணியையும் நிர்மலாவையும் ஒரு கொழு கொழுவென்ற கன்னங்களும், உருண்டையான விழிகளும், வாழைப்பழம் போன்ற விரல்களையும் கொண்ட ஒரு குழந்தையை நிர்மலா கையில் பார்த்தபோது எனக்கு மனதுக்குள் ஒரே சநதோஷம். குழந்தை தனது விரலை பொக்கை வாயுக்குள் வைத்து சத்தம் போட்டு சூப்பிக் கொண்டிருந்தது.

"குழந்தைக்கு எத்தனை மாதம் நிர்மலா என்றேன்?"

அவள் பதில் அளிக்கமுன் சுப்பிரமணி முந்திவிட்டான். கார்த்தகேயனுக்கு இப்போ நான்கு மாதம். இவன் பிறந்தது கார்த்திகை நட்சத்திரத்தில், அது தான் அந்தப் பெயர் வைத்தோம். ஆனால் இந்த விரல் சூப்புவதை மட்டும் பிறந்த நாளில் இருந்து இவன் விடுகிறதாக இல்லை என்றான் மணி.

எனக்கு அவன் சொன்னதைக் கேட்டதும் சிரிப்புத்தான் வந்தது. " அதெல்லாம் அவன் கலியாணம் முடித்து உன்னைப் போன்ற நல்லமனைவி கிடைத்தும் சரியாகிவிடுவான். நீ ஒன்றக்கும் யோசிக்காதே. இதோ குழந்தைக்கு எனது பரிசு" என்று இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகளை குழந்தையினுடைய கையுக்குள் திணித்தேன். விரல் சூப்புவதை விட்டு விட்டு நோட்டை இறுகப்பற்றிக் கொண்டான் கார்த்திகேயன்.

நான் சிரித்தபடி "என்ன சொன்னாலும் கணக்காளன் மணியின் மகனல்லவா. Moneyயின் அருமை இப்பவே இவனுக்கு தெரிகிறது போல" என்றேன் சிலேடை பட.

இருவரும் வாய்விட்டு சிரித்தபோது என் மனதுக்குள் நிறைவான பூரிப்பு ஏற்பட்டது. நிர்மலா குழந்தை திரும்பவும் வரல சூப்புவதைத் தடுக்க ஒரு சூப்பியை வாயுக்குள் திணித்தாள். எனக்கு ஒரு காலத்தில சூப்பியாக இருந்த சுப்பிரமணியின் நினைவுதான் வந்தது.

தாடி

தாடி வைத்த தாகூரையும்
தந்தை பெரியாரையும்
திருவள்ளுவரையும்
கார்ல் மார்க்ஸையும்
ஞானிகள் என்றும் அறிஞர்கள் என்றும்
அறிவாளிகள் என்றும்
ஆன்மீகவாதிகள் என்றும்
கூறும் இவ்வுலகம்
இளைஞனான என்தாடியைப்
பார்த்தால் மட்டும்
காதலியைத் தவறவிட்டவன்
என்கிறது ஏன்?

கவிஞர் முத்துராஜா

கடற்கோள்

காலை உணவு உண்டு
சிறிது களைப்பு ஆறும் நேரத்தில்
ஆழி தன் அலை நாக்கை உள் இழுத்து
கரையின் சிறு தூரத்தை தரையாக்கும்

கட கட எனும் பெரும் சத்தம்
கபீரோ டாங்கியோ
அவ்ரோ விமானமோ
என ஏங்கி நிற்க
தென்னைக்கும் மேலால் கருநாகம்
படம் எடுத்து விரைந்து வரும்
கொடிய நஞ்சு கக்க.

ஐந்து நிமிடம் இல்லை
அலங்கோலம், ஈழ அன்னையது
புடவையின் கரையோர வர்ணம்
கிழிந்து அழிந்து எழும் ஓலம்.

பனையை
வடலியை
தென்னம் ஓலையை
பற்றைகளை
பற்றிப் பிடித்தவரின்
பார்வைகளில்
பரந்து மிதந்து சிதறி
அள்ளுண்டு செல்லும் அவலக்
காற்று

யாரை யார் பிடிக்க
எவரை எவர் அணைக்க
எல்லாமே
கண்மூடித் திறக்கையில்
முடிந்த கதை

வடலிக்குள் செருகுண்டு
கருக்கு மட்டை கழுத்தை அறுத்து
காட்டுத்தடி விலாவைப் பிய்த்து
வாயினுள் புகுந்த நாவல் தடி
மூக்கால் புறப்பட்டு
மூச்சு அடங்கி,
முகமும் உடலெங்கும்
கம்பு தடிகள்
வேல்போல் குத்தி நிற்கும்.

காலைப் புதினங்களை
கால் நீட்டி வாசித்து
இந்துக் கடல் அலையின் மூச்சில்
இதயம் சிலிர்த்து,

கடமையின் உயிர்த் துடிப்பில்
தலைநகர் நோக்கி
தரையில் உரசிப் பறக்கும்
புகை கக்கி,

வானில் பறந்து
முறுக்கிப் பிழிந்து
துண்டு துண்டாய்
வீசி எறியும்
ஆயிரவர் உடலங்கள்
மழைச் சேற்றில்
குமிழித் துளிகளாய்
புதைந்து உரம் ஊட்டும்.

பச்சிளம் குழந்தைகள்
பாலகர்கள்
விடத்தல் பருவ வாலிபங்கள்



தங்கைகள்
அம்மாக்கள்,
தலைமுறையின்
முதுகு எலும்பை நிமிர்த்த என
கண் விழித்த கண்மணிகள்,
நொடிப் பொழுதில்
மண்ணுக்குள்.

துடிப்பு அடங்கிய சூரை மீன்போல
பொறுக்கிப் படம் எடுத்து
புதைக்கும் பிள்ளைகள்

வேரில் வலையில்
குப்பைக் குவியலில்
கம்பி முள்ளில்
சிக்கிய உறவுகள்

வீடு, கோயில், பாடசாலைகளின்
இடிபாட்டுச் சுவருக்குள்
நசிந்த சுற்றங்கள்.


மாண்டு மடிந்த பல்லாயிரவர்
எஞ்சியவர் நோயில்
மிஞ்சியவர் மன நோயில்.
புதைக்கப்பட்டது நம் உயிர்கள்
கிடங்குகளில் ஒன்றாக
உறங்குவது நம் உணர்வுகள்...

தை. சின்னையன் – கனடா

சீர்திருத்த திருமணம்

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நான் பார்த்த புதுமைத்திருமணம் ஐய்யர் இல்லாமல் நடந்த அற்புதத்திருமணம். ஆக்கினி குண்டம் வளர்க்கவில்லை, அம்மி மிதிக்கவில்லை, அருந்ததியும் பார்க்கவில்லை. ஆனாலும் நடந்தது ஒரு புரட்சித் திருமணம். முப்பத்து முக்கோடி தேவர்களை சாட்சிக்கு அழைக்கவில்லை. சமஸ்கிருத சுலோகங்களை ஓதவில்லை. அப்படியிருந்தும் நடந்தது ஒரு உன்னதத் திருமணம். அதுவும் ஒரு இந்துவின் வீட்டுத் திருமணம். ஞாயிறு தோறும் மாலை நாலரை மணி முதல் ஆறு மணிவரை இராகு காலம் என்பது பஞ்சாங்கம். அந்த இராகு காலத்தில் எந்த நல்ல காரியமும் நடைபெறக் கூடாது என்பது ஐதீகம் மட்டுமல்ல சாஸ்திர சம்பிரதாயங்களுமாகும். ஆனால் இந்த புதுமைத் திருமணம், ஞாயிற்றுக்கிழமை, சரியான இராகுகால நேரத்தில் நடந்தது. இது ஒரு காதல் திருமணம், கலப்புத் திருமணம் என்று திருமண அழைப்பிதழ் பறைசாற்றிற்று.

இத்திருமணத்தை நடத்தி வைத்தவர் பகுத்தறிவு பாசறைத் தந்தை ஈ வெ ரா பெரியார் அவர்கள் ஆவார். பெரியார் ஈ வெ ராமசாமி அவர்கள் சரியாக ஞாயிறு மாலை ஐந்து மணி அளவில் திருமணத்தை நடத்தி வைக்க வந்தார். நெசவாளர்கள் நிறைந்த அந்த உறையூர் பகுதியில் ஆயிரக்கணக்கான கருஞ்சட்டைத் தோழர்களும் பொதுமக்களும் ஆரவாரம் செய்தனர். பெரியார் வாழ்க வாழ்க எனப் பெரு முழக்கமிட்டனர்.



பெரியார் மேடைக்கு வந்தார். மணமக்கள் இருவரும் மணமக்களை வணங்கி ஆசி பெற்றனர். பின்னர் இருவரும் உறுதிமொழி வாசித்தனர். " நன்மையிலும் தீமையிலும் நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இணைபிரியாமல் வாழ்வோம்" என்பதே அந்த உறுதி மொழியின் வாசகம் ஆகும். பின்னர் பெரியார் மலர் மாலைகளை எடுத்துக் கொடுத்தார். மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக் கொண்டனர். திருமணம் எவ்வித சாஸ்திர சம்பிரதாயமின்றி இனிதே நிறைவேறியது. அதன் பின்னர் பெரியார் மணமக்களை வாழத்தியும் "ஏ தாழ்ந்த தமிழ் இனமே" என்று மூன்று மணி நேரம் பேசினார். பெரியாரை இந்துமதத்தின் எதிரி என்பர் சனாதானிகள். பிள்ளையார் சிலையை உடைத்த நாத்திகன் என்பர் பலர். பூணூலை அறுத்து வேண்டாத காரியம் செய்தவர் என்பர் வேறு பலர். இவை அனைத்தையும் செய்யத் தூண்டியவர் பெரியார்தான் ஆனால் அவர் இந்து மதத்தின் எதிரி அல்லர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் உயர் திரு ஜவர்லால் நேரு அவர்கள் பாரதத்தின் முதல் பிரதமராக இருந்தபோது அவரது அமைச்சர் அவையில் சட்ட அமைச்சராக இருந்தவர் டாக்டர் அம்பெத்கார் ஆவார். மாண்பு மிகு டாக்டர் அம்பேத்கார் Bar at Law படித்தவர். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் அவரும் ஒருவர். டாக்டர் அம்பேத்காரும் தந்தை பெரியாரும் சிறந்த நண்பர்கள். பார்ப்பனர் அல்லாதோர் மீது அக்கரை கொண்டவர்கள். பார்ப்பனர்கள் அல்லாதவரை சாத்திர சம்பிரதாயங்களின் படியும், ஆகம விதிப்படியும் மற்றும் மனு சாத்திரத்தின்படியும் " சூத்திரன்" என அழைப்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள். அந்த இழிச்சொல்லை அகற்ற போர்கொடி தூக்கியவர்கள். சூத்திரன் என்பது சமஸ்கிருதச் சொல். சூத்திரன் என்றால் தகப்பன் பெயர் தெரியாதவன் என்பது பொருள். சூத்திரன் என்றால் தீண்டத்தகாதவன, பஞ்சமா பாதகன் என்று அர்த்தம். சூத்திரன் என்றால் கண்டதை கிடைப்பதை உண்பவன் என்பது வேறொரு பொருள். தமிழர்களாகிய நாம் இந்த அவமானப் பட்டத்தைச் சுமந்து கொண்டு இந்துக்களாக ஒடுங்கி இருக்கிறோம் என்பது தான் உண்மை. இந்த அவமானச் சொல்லை அகற்ற இயலாது என்றுணர்ந்த டாக்டர் அம்பேத்கர் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் "பௌத்த மதத்திற்கு" மாற முடிவெடுத்தார். பெரியாரை அணுகி தனது தீர்மானத்தை தெரிவித்தார். பெரியாரையும் அவரது ஆதரவாளர்களையும் பௌத்த மதத்தில் சேரும்படி கேட்டுக்கொண்டார். பெரியார் மத மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பெரியார் சொன்ன ஒரே காரணம் கோடிக்கணக்கான தமிழர்கள் இந்து மதத்தில் இருக்கிறார்கள். மூடநம்பிக்கையையும் , அவப்பெயரையும் நீக்க நான் இந்துவாகவே இருந்து போராடுவேன் என்று உரைத்தார். டாக்டர் அம்பேத்காருக்கும் பெரியாருக்கும் சற்று மனத்தாங்கள் ஏற்பட்டது என்னவோ உண்மை. அம்பேத்கார் அவர்கள் தனது ஆதரவாளர்களுடன் பௌத்த மதத்தில் இணைந்தார். ஆனால் பெரியார் இறக்கும்வரை இந்துவாக வாழ்ந்தார் என்பது வரலாற்று உண்மை.

பௌத்த மதம் இந்தியாவில் கி.மு 5ம் நூற்றாண்டில தோன்றிய மதம். டாக்டர் அம்பேத்காரும் அவரது ஆதரவாளர்களும் பௌத்த மதத்தைத் தழுவியதில் இருந்து அம்மதம் இந்தியாவில் ஓரிரு பகுதிகளில் இருப்பதை அறிய முடிகிறது. புத்தரின் அன்பும் பண்பும் நிறைந்த கொள்கைகள், கொல்லாமை, பொறாமை இல்லாமை, மற்றும் அனைவரையும் சமனாக நேசிக்கும் பண்பு போன்றவை இன்றும் நிலைத்து நிற்கிறதா என்றால் அது கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் தாம் பிறந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்திருக்கிறார்கள். சிறுபான்மையினமான தமிழர்களின் உரிமைகளை கொடாது அவர்களை அடக்கி வாழும் சிங்கள பெரும்பான்மையினத்தவர்கள் பலர் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்கள். அகிம்சையையம் அமைதியையம் பேண வேண்டிய பௌத்தமதவாதிகள் இனக்கலவரங்கள் மூலமும், அரச படைகள் மூலமும், போலீசார் மூலமும் வன்முறைகளை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுவது நியாயமா? மக்களைச் சரிசமமாக ஏற்கத்தவறும் எந்த மதத்தையும் எதிர்காலத்தில் மக்கள் ஏற்காமல் போகக்கூடும். இது போன்ற வேற்றுமைகள் மதமாற்றத்துக்கு வித்திடுகிறது. அவ்வேற்றுமைகளை அகற்ற மக்கள் போராட வேண்டும்.

ஜாதி என்ற சொல் சங்கத் தமிழில் இருக்கவில்லை என்று பெரியார் வாதிட்டார். ஜாதி சமஸ்கிருத சொல் என்றும் சாதி என்று திருத்திக் கூறல் வடமொழி திரிபு என்றார். சங்கத்த தமிழ் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டினார். அறுபது ஆண்டுகளுக்கு மேல் இதற்காக உழைத்தார். அதனால் சாதிச் சண்டைகள் இன்னும் ஓயவில்லை. சாதிச் சண்டைகள் இல்லாத கிராமமே தமிழ்நாட்டில் இருப்பதாக தெரியவில்லை.

ஆகமங்களின் விதிப்படி, மனுசாத்திர விதிப்படி நடக்க இயலுமா என பெரியார் சவால் விட்டார். ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காட்டுமிராண்டிகள் வாழ்ந்த காலத்தில் எழுதிய அந்த விதிகள் பொருந்துமாவென கேள்விக்கணை தொடுத்தார். ஆகமங்களின் விதிப்படி பெண்கள் படிப்பது தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது ஆப்கானிஸ்தான் நாட்டில் தலீபன் ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட பிற்போக்கான முறைபோன்றது. ஆனால் இன்று பெண்கள்தான படித்துப்பட்டம் பெற்று வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். ஆகம விதி என்னவாயிற்று?. ஆகமவிதிப்படி ஆங்கிலம் நீசபாசையாகும். ஏற்றுக்கொள்ள முடியுமா?. பொதுவுடமை பேசும் நாடுகள் கூட இன்று ஆங்கிலம் கற்க நாட்டம் காட்டுவதை அனைவரும் அறிவர். விஞ்ஞான உத்திகள் ஆங்கிலத்தில் மண்டிக்கிடப்பதை மறுக்க இயலுமா? உலக நாடுகள் அனைத்தும் ஆங்கில அறிவு பெற முயற்சிப்பதை யாராலும் தடுக்க முடியுமா?

ஆகம விதிப்படி கடலையும் சமுத்திரத்தையும் தாண்டி போகப்படாது என்று சொல்லப்பட்டுள்ளது. நடக்கக் கூடிய காரியமா?. திரைகடல் ஓடித் திரவியம் தேடு என்பதன் அர்த்தம்தான் என்ன? அப்படி கடல் கடந்து செல்லாமல் கிணற்றுத்தவளைகள் போல் வாழ் என்கிறதா ஆகம விதிகள்? ஆப்படி கடல் கடந்து சென்றால் பாவம் . பரிகாரங்கள் செய்யவேண்டும் என்பதெல்லாம் இன்று செல்லாக்காசுகளாகிவிட்டது. இந்தயாவில் இருந்தும் ஈழத்தில் இருந்து எத்தனையோ இந்து தெய்வங்களின சிலைகளை கனடாவுக்கு கொண்டுவந்து கோயில் அமைத்து வழிபடுகிறோமே இவையாவும் ஆகமத்திற்கு உற்பட்டதா? ஆக ஆகமங்கள் யாரும் அனுஷ்டிக்க முடியாத கோட்பாடுகள் என்பதற்கு இவை போதுமான ஆதாரங்கள்.

பெரியாரின் வாழக்கை வரலாற்றை பார்த்தால் அய்யா அவர்கள் வெள்ளையர் ஆட்சிகாலத்தில் மதராஸ் இராஜ்யம் காங்கிரஸ் ஆட்சி தலமையில் இருந்தது. அந்தக் காலக்கட்டத்தில கேரள மாநிலத்தில் உள்ள “வைக்கம” என்ற ஊரில் ஜாதிக்கலவரம தோன்றயது. நம்பூதிரிகள் என்னும் பார்ப்பனர் மிகுதியாக வாழும் பகுதியிலுள்ள சாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களும் நாடார்களும் நடமாட தடைவிதித்து இருந்தார்கள். காந்தியடிகளின் ஆணையை ஏற்று பெரியார் வைக்கத்தில் போராட்டம் நடத்தினார். தனது மனைவி நாகம்மையோடு மறியல் செய்து சிறைசென்றார். ஆங்கிலேயர் ஆட்சியின் போது பல கொடுமைகளுக்கு ஆளாகிய சிங்கம் பெரியார். அவருக்கு “வைக்கம் வீரர்” என்ற பட்டமும் உண்டு. அது மட்டுமல்ல வெள்ளையர்களை எதிர்த்து ஜனநாயக முறையில் பிரச்சாரம் செய்யதார். இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியில பிரச்சார பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்கள் அம்முகாமில் சோக்கப்பட்டனர். அதற்கு “குருகுலம்” எனப் பெயர் சூட்டப்பட்டது. அத்தனை செலவுகளையும் காங்கிரஸ் கட்சியே ஏற்றுக்கொண்டது. ஆனால் தங்களுக்கு வேண்டிய உணவை அவர்களே தயாரித்துக்கொள்ள வேண்டும். குருகுலத்தில் இருந்த பார்ப்பன மாணவர்கள் தங்களுடைய கைவரிசையை காட்டினார்கள். பார்ப்பான மாணவர்களே சமையல் செய்து முதலில் உணவருந்துவார்கள். மிகுதியை பார்ப்பான மாணவர்கள் அல்லாதவர்களுக்கு கொடுப்பார்கள். சத்தியமூர்த்தி ஐயர் போன்ற தலைவர்களின் ஆதரவு அவர்களுக்கு இருந்தது. அதைக் கேள்விப்பட்ட பெரியார் வெகுண்டு எழுந்தார். காந்தியடிகளிடம் முறையிட்டார். காந்தி ஒருநாள் குருகுலத்துக்கச் சென்று பார்வையிட்டார். விசாரித்த போது பெரியார் சொன்னதில் உண்மையுண்டு என்பது அவருக்கு தெரியவந்தது. அவர் ஒரு தீர்ப்பு சொன்னார். அந்தத் தீர்ப்பின்படி பிராமண மாணவர்கள்தான் சமையல் செய்யவேண்டும், ஆனால் உணவை எல்லோரும் ஒன்றாக உண்ணவேண்டும் என்றார் காந்தி. அவரது தீர்ப்பு பெரியாருக்கு பிடிக்கவில்லை. காங்கிரஸ் கட்சியை விட்டு விலகினார். பெரியாருக்கு ஆதரவு தெரிவித்து காங்கிரசில் இருந்து விலகியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்பட்ட சிதம்பரம் பிள்ளை, தமிழ தென்றல் திரு வி கல்யாணசுந்தரனார் போன்றோர்.

அந்த வேகம் பெரியாரை உந்தியது. அவரது எண்ணம், எழுத்து அனைத்தும் ஆரிய மாயையை அம்பலப்படுத்துவதாக இருந்தது. ஐயர் இல்லாத திருமணங்களை ஊக்குவித்தார், ஆயிரக்கணக்கான சுயமரியாதை திருமணங்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டில் நடந்தன. பாாப்பனர் இல்லாத இயக்கங்களை தொற்றுவித்தார். சுயமரியாதை இயக்கங்களை பட்டித் தொட்டகளில் எல்லாம் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர் நீதிக் கட்சியை ஆதரித்தார். பெரியாரின் கொள்கைகள் அறிஞர் அண்ணாத்துரை அவர்களுக்குப் பிடித்துக்கொண்டது. தனது கல்லூரிப் படிப்பு முடிந்ததும் பெரியாருடன் இணைந்து கொண்டார். அண்ணாவின் அறிவு, ஆற்றல், அடுக்கு மொழிபேசும் நாசுக்கு, சரளமான பேச்சு, எழுத்துத் திறமை அவரை கட்சியில் தளபதியாக்கிற்று. இருவரும் சோந்து ஆரியத்துக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள். நீதிக் கட்சி திராவிடக்கட்சியாயிற்று. 1947ல் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) உதயமானது.

1967ல் தி.மு.க, தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் வென்றது. பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதல்வரானார். அண்ணா அவர்கள் தமிழகச் சட்டமன்றத்தில் கொண்டுவந்த முதல் தீர்மானம் அல்லது மசோதா யாதெனில், இதுவரை நடந்து முடிந்த சுயமரியாதைத் திருமணங்கள் இனி தொடர்ந்து நடக்கும். அத்திருமணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படும் என்பதே. இதனை அண்ணா, பெரியார் அவர்களுக்கு காணிக்கையாக்கினார். இதுவே எல்லா சீர்திருத்த திருமணங்கள் சட்டப்படி செல்லுபடி ஆக்கப்பட்டது என்பது வரலாறு. இந்து மதத்தில் தமிழர்களுக்குள்ள இழிவு நீங்க என்ன செய்ய வேண்டும் என்பதை இளைஞர்கள் சிந்தித்து முடிவு எடுப்பது அவசியம்.

உங்களுக்குத் தெரியுமா?

விநாயகர் கையில் பீர் கோப்பை

அமெரிக்காவில் உள்ள தனி யார் மது பான நிறுவனம் தன்னுடைய பீர் பாட்டிலில் விநாயகர் உருவத்தை பயன் படுத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அந்த நிறுவனத்தின் பீர் பாட்டில்களில் விநாயகர் உருவம் பொறித்த லேபிள் ஒட்டப் பட்டுள்ளது. இண்டிகா இந்தியா என்ற பெயரில் பீர் பாட்டில்களில் ஒரு கையில் பீர் கோப்பையும் துதிக்கையில் மற்றொரு பீர் கோப்பையும் விநாயகர் வைத்திருப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்க வாழ் இந்துக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்துக் கடவுள் கையில் பீர் கோப்பையுடன் இருப்பது போல் எப்படி சித்தரிக்கலாம் என்று அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதையடுத்து அந்த அமெரிக்க நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்க வாழ் இந்தியரான பிரிஜ் தீர் வழக்கு தொடர்ந்துள்ளார். இதற் கிடையே அந்த அமெரிக்க நிறுவனமும் அந்த லேபிளை வாபஸ் பெற்றுள்ளது.

சாலையூர்ச் செல்வன் – லண்டன்

தமிழிலே வேதாந்தம் – பகுதி 1

விநாயகர் துதி

மூலப் பரம்பொருளே மூஷிக வாகனனே
ஞாலத்திற் கீடன்னை தந்தையெனும் - ஞானத்தை
வேலற் குணர்த்தியே வேய்ங்கனி முதற்கொண்டாய்
சூலப்பரிந்து கவிசாற்ற எனக்கருளே.

மீசாலை மாவடிப்பிள்ளையார் துதி

தேவடியராகிச் சிரமேற் கரங்குவித்தோர்
காவடியர் பின் மற்றோர் கரகமெடுத் - தாடிவர
மீவடியும் மீசாலைப் பதிதனிலே வீற்றிருக்கும்
மாவடிப் பிள்ளையாரின் மலரடியைப் போற்றுதுமே.

மண்டுவில் கண்ணகி அம்மன் துதி

எண்ணத்தகுமாமோ ஏர்வளம்சேர் மண்டுவில்
கண்ணகி அம்மனருட்காட்சிதனை - வண்ணமிகு
பூங்கா எழிலுடையாள் புகழடியைச் சேவித்தால்
நீங்காத வெம்பகையென் கொல்.

குருபகவான் சுவாமி சின்மயானந்தா துதி

சின்மய முத்திரையின் சிறப்புமிக்க தத்துவத்தை
புன்னகை முகத்தோனாய்ப் புவியெங்கும் - தான்பரப்பி
இன்னல் படும்மானிடத்தை யிரட்சிக்க வந்த
சின்மயானந்த குருச் சீரடியைச் சேவிப்பாம்.

பந்து ஜனம்

சந்தையின் கூட்டமன்றோ இந்தப்
பந்து ஜனங்கள் எல்லாம்
சந்தை முடிந்தபின்னே தம்தம்
சொந்த வழி போவார்.

என்றும் துணை இருப்பாய்

என்றைக்கும் என்துணையாய் இறைவா
நின்றவன் நீயல்லவோ
இன்றைக்கு நீமறந்தால் - ஆபிரிந்த
கன்றைப்போல் நானல்லவோ.

நாற்குரவர் போற்றி

அழுதிடும் போதெல்லாம் அரவணைத்த அன்னையே போற்றி
விழுமியகல்விக்கு வித்திட்டதந்தை வித்தகா போற்றி
ஐயந்திரிபற அறிவினைப்புகட்டிய ஆசானே போற்றியிவ்
வையம்தனைப் பாலிக்கும் பராபரமே போற்றி போற்றி.

வேதாந்தத்தைப் பற்றி அறியுமுன் வேதாந்தம் என்ற சொல்லின் பொருளை நாம் மிகத்தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். வேதம் ஃ அந்தம் வேதாந்தம் ஆகிறது. அந்தம் என்றால் முடிபு என்பதை நாமெல்லோரும் நன்கறிவோம். வேதம் என்பது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்கிற நான்கு வேதங்களையும் குறிக்கும். மேலே கூறப்பட்ட வேதங்கள் ஒவ்வொன்றின் பிற்பகுதிகளாக உபநிடதங்கள் உள்ளன. ஆகவே வேதங்களின் இறுதிப்பகுதியில் உள்ள உபநிடதங்களின் சாராம்சமே வேதாந்தம் என நாம் தயக்கமின்றி எடுத்துக்கொள்ளலாம். இதைவிட வேதம் என்ற பதத்துக்கு அறிவு என்றும் பொருள் உண்டு. அறிவு எனப் பொருள் கொள்வோமாயின் மனித அறிவின் முடிவே வேதாந்தம் என்றும் பொருள் கொள்ளலாம். மனிதன் எது ஒன்றைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு அவனுடைய மனம் புத்தி இரண்டும் அவசியமாகின்றன. அடிப்படையில் இவை இரண்டும் எண்ணங்களின் தொகுப்பேயாயினும் அவை செயல்படும் வரையறைகளை வைத்து உபநிடதங்கள் இவை இரண்டையும் பற்றித் தெளிவாக விளக்குகின்றன.

தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென்றுணர்.

அருந்தமிழ் மூதாட்டியாம் ஒளவைப்பிராட்டி பாடியருளிய மேற்படி வெண்பா விலிருந்து நாம் அரியதொரு உண்மையை அறிந்துகொள்ள முடிகிறது.

அதாவது

(1) திருவள்ளுவ தேவரால் இயற்றப்பட்ட உலகப்பொதுமறை எனக் கருதப்படும் திருக்குறளின் கருத்துக்களும்,

(2) வடமொழியாம் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கும் வேதங்கள் நான்கின் இறுதிப்பகுதிகளில் அமைந்திருக்கும் உபநிடதங்களின் சாராம்சங்களும்,



(3) அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர் ஆகியோரால் தமிழிலே பாடப் பெற்ற தேவாரப்பதிகங்களின் கருத்துக்களும்,

(4) குறுமுனியாம் அகஸ்தியப் பெருமானால் பாடப்பெற்ற ஞான சூத்திரங்களின் அர்த்தங்களும்,

(5) மாணிக்கவாசகப் பெருமானால் பாடப்பெற்ற திருவாசகக் கோவை யின் தத்துவங்களும்,

(6) திருமூல நாயனார் அருளிய திருமந்திரத்தின் ஆழ்ந்த கருத்துக்களும்,

இவை யாவும் ஒத்த ஒரே வாசகங்களென உணர்வாயாக என்பதே மேலே தரப்பட்ட வெண்பாமூலம் ஒளவைப்பிராட்டி அனைவருக்கும் புகட்ட விரும்பிய அறிவுரையாகும். ஆகவே எவனொருவன் ஆறில் எதையாகினும் ஒன்றைச் சந்தேக விபரீதமறக் கற்று உணர்கிறானோ அவன் ஒரு வேதாந்தி ஆகிறான். வேற்றுமையில் ஒற்றுமை காண்பவன் வேதாந்தி. வேதங்களின் முடிபில் நமபிக்கை கொண்டவன் வேதாந்தி. மக்களில் பெரும்பாலோர் எதைப் பற்றியெல்லாம் ஆரத்தீர ஆராய்வதில்லையோ, எல்லாவற்றிற்கும் விட எதற்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அது அவர்கள் அனு தினமும் வழிபடும் ஆண்டவனே. இயேசு பெருமான் கூறியவற்றில் அதி முக்கியமானதொரு போதனை ஆண்டவனைப்பற்றியதே.

முதலில் நீ ஆண்டவனின் இராச்சியத்தை நாடுவாயாக. மற்றவை யாவும் தானாகவே உன்னை வந்தடையும் - என்பதே அது.

இதைக்கூறிவிட்டு ஆண்டவனின் இராச்சியத்தைத் தேடி அங்கிங்கென் றலையாதே. அது எங்கேயிருக்கிறது என்பதை ஜாடையாகச் சுட்டிக் காட்டுமுகமாக ஆண்டவனின் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கிறது என்றும் அருளி இருக்கிறார்.

"Seek ye first the Kingdom of God. Everything else shall be added unto thee". "The Kingdom of God is within"

உனக்குள்ளேயே இறைவனின் இராச்சியம் உள்ளது. அந்த

இராச்சிய த்திலேதான் இறைவன் வீற்றிருக்கிறான் என்ற உண்மையைத் திரு மந்திரத்திலே திருமூல நாயனார் மிகத்தெளிவாகக் கீழே வரும் மந்திரம் (பாடல்) மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தோற்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.

ஆருயிரின் உள்ளமாகிய நெஞ்சமே திருக்கோயிலின் காணப்படும் பெருமை மிக்க கருவறையினை ஒக்கும். அக்கருவறையிலேதான் இமைப்பொழுதும் நீங்காமல் இறைவன் வீற்றிருக்கிறான். கருவறைக் கோபுர வாசலால் எட்டிப் பார்த்தால் தான் உள்ளே இருக்கும் மூர்த்தியைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். அந்தக் கோபுரவாசல் தான் நம் ஒவ்வொருடைய வாய் என்று கூறிவைத்திருக்கிறார் திருமூலநாயனார். ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் புறப்படுவது எது? வார்த்தைகளே. ஆகவே வெளிவரும் வார்த்தைகளைக் கொண்டுதான் ஒருவரின் உள்ளத்துள்ளே வீற்றிருக்கும் மூர்த்தியானவர் எத்தகைய சுபாவம் உடையவர் என்பதை நாம் இலகுவில் அறிந்துகொள்ள முடியும். கள்ளவழிகளிலே ஜீவாத்மாவை இழுத்துச் செல்ல முயலும் மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்புலன்களும் அழகிய மணிவிளக்குகள் போன்றவையே. உடம்பாகிய ஆலயத்துள் இறையின் சாயலைக்கொண்ட ஜீவாத்மா குடிகொண்டிருக்கும் வரையில் தான் இந்த ஐந்து மணி விளக்குகளும் எரிந்துகொண்டிருக்கும். ஜீவாத்மா பிரிந்தவுடன் ஐம்புலன்களும் செயலற்றவை ஆகிவிடுகின்றன.

புதிய கோளம் கண்டுபிடிப்பு

